# சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"


VOL-2. தொகுதி - 2. | June - Jyul ஜூன் - ஜூலை 1914. | No-11-12. பகுதி-கக-கஉ


## இல்லறமல்லது நல்லறமன்று.

இந்திரன் முதலிய இறைவர் பதங்களும் அந்தமில் இன்பத் தழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதி யென உயர்ந்தோரா லெடுக்கப்பட்ட அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நான்குபொருள்களுள் அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தனசெய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். இஃது இம்மையின்பம், மறுமையின்பம், மோட்சமென்னு மூன்றனையும் தருவதாம். பொருளோ இம்மையின்பம் மறுமையின்பமென்னு மிரண்டனையும் தருவதாம். அறம் பொருளென்னு மிரண்டனுள் அறம் பொருளினும் மேம்பட்டதாக விருத்தலின், அறத்தைச் செய்பவர் பொருளின் பயனாகிய இம்மையின்பம் மறுமையின்ப மென்பனவேயன்றி மோட்சத்தையும் பெறுதற்குரியவராவரென் பது திண்ணமாம். இன்பம் அறத்தாலும் பொருளாலுமுண்டா வதாம். மோட்சமோ பொருளாலன்றி அறத்தாலேயே யுண்டாவ தாம். ஆகவே இன்பமும் வீடும் பயனாவதன்றிச் சாதனமாவதில் லையாம்; ஆயினும் இன்பம் அறமும் பொருளும்போல இனிவரு மின்பத்தை யனுபவித்தற்கு ஸ்மிருதி (நினைப்பு) வாயிலாகச் சாதனமாம்.

அவ்வறம் இல்லறம் துறவறமென இருவகைத்தாம். இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச்சொல்லுகின்ற நெறிக்கணின்று அதற்குத் துணையாகிய மனையோடுஞ் செய்யப்படும் அறமாம். இல்வாழ்க்கையாவது இல்லா (மனையா)ளோடு கூடிவாழ்தலினது

சிறப்பாம். துறவறமோ இல்லறத்தில் வழுவாதொழுகி அறிவுடையவராய்ப் பிறப்பினையஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத்துறந்தார்க்குரியதாய அறமாம்·இதனால் இல்லறத்தில் வழுவாது ஒழுகியவர்க்குத் துறவறத்தில் வழுவா தொழுகுதல் வாய்ப்பதாமென்பது நன்கு விளங்குவதாம். முன்னர் அன்னையைபறிந்து, பின்னர் அன்னைவாயிலாகப் பிதாவை யுணர்ந்து, அப்பால் பிதாவினுத்தரவின்படி ஆலயந் தொழுதுவருகின்றவர் இல்லறத்தைமேற்கொண்டொழுகவேண்டுமே யன்றித் துறவறத்தை மேற்கொண்டொழுகுதல் கூடாது:அவர் இல்லறத்தை மேற்கொள்ளாது துறவறத்தை மேற்கொண்டொழுக முற்படுவாராயின், அது முற்றுப் பெறுவதரிதாம்; ஆதலின் அவர்க்கு "இல்லறமல்லது நல்லறமன்று" என்று ஔவைப் பிராட்டியார் அருளிச்செய்தனர். ‡ 'இல்லற மல்லது நல்லற மன்று' என்பதன் பொருள்வருமாறு:—இல்லறமல்லது-(பிதாவின் உத்தரவின்படி கல்விகேள்வியறிவுடையவரா யொழுகுகின்றவர்க்கு முன்னர்), இல்லறத்தில் ஒழுகுவதல்லது, (மற்றது), நல்லறமன்று—சிறந்த அறமாகாது என்பதாம். மற்றது என்றது துறவறத்தை. இல்லறத்தில் வழுவா தொழுகி யறிவுடையவராகாதவர்க்குத் துறவறத்தில் வழுவா தொழுகுதல் சித்திப்பது மிகவுமரிதாம். தொடர்புபற்றுது இயல்பாக எல்லாவுயிர்கள்மேலுஞ் செல்வதாகிய கருணை, மெய், வாய், கண், மூக்கு, செவியென்னு மிந்திரியங்களையும் மனத்தையும் அடக்குவதாகிய தவம், மெய்ம்மைபேசுதல், எவரிடத்தும் கோபமில்லாதிருத்தல், பிராணிகளுக்குத் தீமை செய்யாமை, ஒருயிரையுங் கொல்லாமை முதலியன இல்லறத்தில் வழுவா தொழுகித் துறவறத்தை மேற்கொண்டவர்க்கல்லது மற்றவர்க்குச் சித்திப்பது ஒருவாற்றானுமில்லையாம். வாமதேவர் சுகர் முதலாயினோ இல்லறத்தை மேற்கொள்வ தொழிந்து துறவறத்தை மேற்கொண் டொழுகித் தத்துவஞானிகளாக விளங்கினரென்று நூல்கள் கூறுவதனால் இல்லறத்தை மேற்கொள்ளுவ தொழிந்து, துறவறத்தை மேற்

‡ இதனை இல்லறம் நல்லறம் அல்லது அன்று என்றன்வயஞ் செய்து, இல்லறம் - இல்லறத்தில் ஒழுகுவது, நல்லறம் - சிறந்த அறமாம், அல்லது - துறவறத்தி லொழுகுவது, அன்று - சிறந்த அறமாகாது என்று பொருள் கூறினும் பொருந்தும். இல்லறமல்லது - ஒருபற்று மில்லாமையாகிய துறவறத்திலொழுகுவதல்லது, மற்றது - இல்லறத்திலொழுகுவது, நல்லறமன்று - சிறந்த அறமாகாது என்று பொருள் கூறுவாருமுளர் மற்றது என்பது சொல்லெச்சம்.

கொண்டொழுகித் தத்துவஞானத்தைப் பெறலாகாதோ எனின், கூறுதும்:—அவர்கள் கீழ்ப்போன பிறப்புக்களில் செய்யவேண்டியவற்றையெல்லாஞ் செய்துமுடித்து, ஏதோ ஒரு கர்ம விசேஷத்தால் பிறந்தவர்களாதலின், அவர்கள் இல்லறத்தை மேற்கொள்ளுவதொழிந்து, துறவறத்தை மேற்கொண்டொழுகி முத்தரானார்கள். நாம் அத்தன்மையரல்லேமாகலின், நமக்குரியதுமுன்னர் இல்லறத்தை மேற்கொண்டொழுகுதலேயாம். இவ்வாறுள்ள நம்மனோரை நோக்கித்தான் ஔவைப் பிராட்டியார், 'இல்லறமல்லது நல்லறமன்று' என்றருளிச் செய்தனர்.

இல்லறத்தை மேற்கொண் டொழுகுவ தொழிந்து, தத்துவ ஞானம் பெறவேண்டுமென்னும் விரைந்தநோக்கமின்றித் துறவறத்தை மேற்கொண்டவர் கூடாவொழுக்க முடையவராக விருத்தலை யின்றுங் காணலாம்; இனியுங் காணலாம்; ஆதலால், நாம் இல்லறத்தில் வழுவா தொழுகினல் பெறவேண்டியவற்றையெல்லாம் தவறாது பெறுதற்குரியவராவோம்.

இல்லறத்தி லொழுகுவார் முக்கியமாக மேற்கொள்ளுதற்குரியன: மனைவிமைந்தர் முதலாயினோரிடத்து அன்பாயிருத்தல், விருந்தினர்க் குபசாரஞ்செய்தல், யாவரிடத்து மின்சொற்கூறல், பிறர் செய்த வுபகாரத்தை மறவாமை, பகைவர் சிநேகிதர் அயலாரென்னு மூவரிடத்தும் நடுவுநிலைமையோ டொழுகுதல், மனம் வாக்குக் காயமென்னும் திரிகரணங்களையுந்தீய வழியிற்செல்லாவாறடக்குதல், தத்தம் † வருணத்திற்கும்நிலைக்கும்ஒத்தப்பட்டஒழுக்க முடையவராயிருத்தல், பிறர்மனைவியரை விரும்பாமை, பிறர் செய்த தீங்கைக் கூடுமான வளவும் பொறுத்திருத்தல், பிறரது செல்வத்தைக்கண்டு பொறாமை கொள்ளாதிருத்தல், பிறரதுபொருளை யபகரிக்க விரும்பாமை, காணாதவிடத்துப் பிறரை நிந்தித்துக் கூறாமை, பயனில சொல்லாமை, தீய செயல்களைச் செய்தற் கஞ்சுதல், உலகத்தோடொத்து நடத்தல், வறியாரா யேற்றார்க்கு இல்லையென்னாது அவர் வேண்டியவற்றைக் கொடுத்தல் முதலியனவாம். இவையெல்லா முடையவராக ஒழுகுகின்றவர்தாம் வாஸ்தவமாக இல்லறத்தி லிருந்தொழுகு கின்றாராவர். இவர்க்கிம்மைப் பயன் புகழாம், மறுமைப் பயன் சுவர்க்கமாம்.

† வருணம் - ஜாதி. நிலை - ஆசிரமம்.

இல்லறத்தில் வழுவா தொழுகுகின்றவர்க்கு மறுமைப்பயன் சுவர்க்கமா மென்பது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்று திருக்குறள் கூறுவதாலும்,

"இம்மையில் சுகத்தையும் மறுமையில் சாசுவதமாய புண்ணியலோகத்தையும் எவன் விரும்புகின்றானோ அவன் அந்தக் கிருகஸ்தாசிரமத்தை முயற்சியோடுகாப்பாற்றல்வேண்டும்; அஃது இந்திரிய வடக்கமில்லாதவரால் காப்பாற்றப் படுவதாகாது" என்று மனுதர்ம சாஸ்திரம் கூறுவதாலும் நன்குவிளங்கும்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் துறவறத்தை மேற்கொள்ளாமல் இல்லறத்திலிருந் தொழுகினாரன்றோ? இல்லறத்தார்க்குச் சுவர்க்கப்பே றன்றி மோட்ச மின்றுமாகலின், அவர்க்கு மோட்சமின்றோ வெனின், கூறுதும்:—துறவு அகத்துறவு புறத்துறவு எனவிருவகைத்தாம். திருவள்ளுவநாயனர் இல்லறத்திலிருந்தே அகத்துறவு பூண்டொழுகினாராதலின், அவர்க்குமோட்சமின் றென்பதுபொருந்துவதன்றாம். திருவள்ளுவநாயனர் அகத்துறவே மோட்சத்திற்குக் காரணமாவதன்றிக் கேவலம்புறத்துறவு மோட்சத்திற்குக் காரணமாவதில்லை யென்பதை விளக்கத் தாம் இல்லறத்திலிருந்தே அதனை யொழுகிக்காட்டினார். இதனாலும் துறவே மோட்சத்திற்குக் காரணமாமென்பது இனிது விளங்கும். "இல்லறமல்லது நல்லற மன்று" என்று திருவாய் மலர்ந்தருளிய ஔவைப்பிராட்டியார் தம் வாழ்நாள் முற்றும் துறவற வொழுக்கத்தினரா யிருந்தா ரென்பதும் இங்குக் கவனித்தற் பாலதாம்.

தொல்காப்பியம் கற்பியல் "காமஞ் சான்ற கடைக்கோட் காலை, யேமஞ் சான்ற மக்களோடு துவன்றி, பறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும், சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே".

என்னுஞ் சூத்திரத்தினுரையில் நச்சினார்க்கினியார் "இது முன்னர் இல்லற நிகழ்த்திய தலைவனும் தலைவியும் பின்னர்த் துறவற நிகழ்த்தி வீடுபெறுப என்கின்றது" என்றும், "ஏமஞ்சான்ற வாவன வானப்பிரத்தமும் சன்னியாசமும்; எனவே, இல்லறத்தின் பின்னர் இவற்றின்கண்ணே நின்று பின்னர் மெய்யுணர்ந்து

வீடுபெறுப என்றார்; இவ்வீடுபேற்றினை யின்றியமையாதது இவ்வில்லறமென்பது இதன் பயன்" என்றும் கூறியிருத்தலைக் கவனிப்போமாயின், இல்லறத்தின் முக்கியப்பயன் துறவற வாயிலாக மோட்சமாமென்பது செவ்விதாக விளங்குவதாம்.

இத்தகைய இல்லறத்தை நல்லறமன்றென்று தமக்கென வொன்றின்றி யிகழ்பவர் ஒரு வாற்றானு முய்வதில்லையாம். திருவள்ளுவர் முதலாயினோர்போன் றொழுகுகின்றவர்க்கு இல்லறமே பெரிதாம்; பட்டினத்தடிகள், பத்திரகிரியார் முதலாயினோர்போன்றொழுகுகின்றவர்க்குத் துறவறமே பெரிதாமென்பது அவர்களின் சரித்திரத்தை வாசித்துணருவோமாயின், நன்கு விளங்கும். இதனால் அகத்துறவு பூண்டொழுகுதல் அதனோடு புறத்துறவும்பூண்டொழுகுதல் என்னு மிரண்டற்கும் இல்லறத்தில் வழுவாதொழுகுதல் சிறந்த காரணமாமென்பது மாறுபடாது விளங்குவதாம். பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி, ஆதரவில்லார், வறுமையுடையார், திக்கில்லாதிறந்தார், பிதிரர், கடவுள், விருந்தினர், சுற்றத்தாரென்னு மிவர்களுக்குத் தான் அறநெறியிற் சென்று தேடிய பொருளைப் பகுத்துக்கொடுத்து வாழுகின்றவனது வாழ்க்கையே பயன்பட்ட வாழ்க்கையாம். இவ்வாழ்க்கையே துறவற வாயிலாக மோட்சம் பெறுதற்குரிய வாழ்க்கையாம். இது பற்றித்தான் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார் "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை" என்றருளிச் செய்தனர்.

"தந்தைதாய் சற்குருவை யிட்டதெய் வங்களைச்
சன்மார்க்க முளமனைவியைத்
தவறாத சுற்றத்தை யேவாத மக்களைத்
தனைநம்பி வருவோர்களைச்
சிந்தைமகிழ் வெய்தவே பணிவிடைசெய் வோர்களைத்
தென்புலத் தோர்வறிஞரைத்
திதிலா வதிதியைப் பரிவுடைய துணைவரைத்
தேனுவைப் பூசுரர்தமைப்.
சந்ததஞ் செய்கடனை யென்றுமிவை பிழைபாது
தான்புரிந் திடலில்லறம்" என்று அறப்பளீசுர சதகம்
கூறுவது இங்குணர்தற் பாலதாம்.

## புலாலுண்ணல் புண்ணியர்க் கழகல்ல.

"கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ வறியேன் பராபமே"

புலாலுண்ணலாவது உயிரின் நீக்கிய மாமிசத்தை உண்ணுதலாம். மாமிசம் கொலையினாலே அகப்படுதலால் அதனை உண்ணுதல் கொலைப்பாவத்தின் காரியமாகும். மாமிசத்தை ஒருமுறை உண்டவன் கொலைவாயிலாகப் பின்னும் அதனை விரும்புதலால், மாமிசம் உண்ணுதல் கொலைப்பாவம் விருத்தியாதற்குக் காரணமாகும். ஆகவே, மாமிசம் உண்ணுதல் கொலைப்பாவமொன்றோடமையாது, அதன் விருத்திக்கும் காரணமாகிப் பகுத்தறிவுடைய மனிதப் பிறப்பினர்க்கு இன்றியமையாது வேண்டப்படும் "அருளுடைமை" எனனும் குணம் உண்டாகாமற் செய்து விடுகின்றது.

சிலர் "நாங்கள் மாமிசத்தைப் புசித்தோ மாயினும், உயிர்களிடத்து அருளுடையோம்" என்று கூறுகின்றார்கள். அருளுடைமையாவது தனக்கு உண்டாகும் இன்பதுன்பங்களைப் பொருட்படுத்தாமல், பிறவுயிர்களுக்கு உண்டாகும் நன்மையையே நாடுதலாகும். அவ்விதம் அவர்கள் பிறஜீவர்களுடைய நன்மையைக் கருதுவது உண்மையாயின், அவர்கள் அன்றே பிறவுயிர்களைக் கொல்வதாற் கிடைக்கும் மாமிசத்தை உண்ணுதலையும் விலக்கியிருப்பார்கள். ஆகவே, மாமிச உணவை விலக்காமல் "நாங்கள் அருளுடையோம்" என்று சொல்வது நாடகமாத்திரமேயாவ தன்றி உண்மையன்றென்பது தெள்ளிதிற் றுணியப்படும். இது பற்றியே, திருவள்ளுவ நாயனார் தாமியற்றிய பொதுமறையின்கண் 'அருளுடைமைக்குப்பின் 'புலால் மறுத்தல்' என்னும் அதிகாரத்தைவைத்துக் காட்டியும், "தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூனுண்பான், எங்ஙனம் ஆளும் அருள்" என விளக்கியும் கூறினர்.

பஞ்சமா பாதகங்களாகிய கொலை களவு கள் காமம் பொய் என்பனவற்றுள், மிகக் கொடியபாவம் கொலைப் பாவமேயாகும். உலகத்தில் புலாலுண்பவர்க ளில்லையானால், புலாலை விற்றற்பொருட்டுக் கொலை செய்பவர்களுமில்லை. "தினற்பொருட்டாற் கொல

லா துலகெனின் யாரும், விலைப்பொருட்டா லூன்றருவா ரில்" என்பது தேவர்திருமறை. ஆகவே, பஞ்சமா பாதகங்களுள் தலைமையாகிய கொலைப்பாவத்திற்குக் காரணமாகப் புலாலுண்ணல் இருக்குமாயின் அஃது எவ்வளவு பெருங் கொடும் பாவமாகும்?

"உயர்ந்த சாதியாரென்று சொல்லப்படும் நாம் நம்மினும் தாழ்ந்த சாதியாரென்று சொல்லப்படுபவர்களிடத்தே ஜலபானம் பண்ணினும், நாமும் தாழ்ந்த சாதியாரென்று சொல்லப்படுபவர்களோடு சேர்ந்தவராக மதிக்கப்படுவோம்" என்று அஞ்சி நடக்கின்றவர்கள் புலையருடைய மலத்தைப் புசிக்கின்ற பன்றி கோழி முதலிய வற்றைப் புசிக்கின்றார்களே! அவர்கள் தம்மை யாரென்று மதிக்கின்றார்களோ! அயல் வீட்டில் பிணங்கிடந்தால் போஜனஞ் செய்வதற்கு மனம் பொருந்தாதவர்கள் மிருகம் பட்சி முதலியவற்றின் பிணத்தைக் கலத்திலே படைத்துக் கொண்டு புசிக்கின்றார்களே! உண்ணும் அன்னம் தண்ணீர் ஊறுகாய் முதலியவைகளிலே மயிர் எறும்பு புழு முதலியவைகளைக் கண்டால், மிக அருவருத்து உண்ட சோற்றையும் கக்கும் மனிதர்கள், மற்ற மாமிசங்களைப் புசிக்கின்றார்களே! அந்தோ! அந்தோ!! இஃதென்ன மதியீனம்!!! மனிதர்களுடைய பிணங்களை அடக்கஞ் செய்வதற்குப் பூமியில் சுடுகாடுகள் அமைந்தவாறு போல, மிருகம் பட்சி மச்சம் முதலிய வற்றின் பிணங்களை அடக்கஞ் செய்தற்கு ஜீவதயை யில்லாதமனிதர்களுடைய வயிறுகளே அமைந்து கிடக்கின்றன.

சிலர் மாமிசம் உண்ணாது விடுவோமாயின், எங்கள் உடம்பு மெலிகின்றதெனக் கூறுகின்றார்கள். நெடுங்காலமாகப் புலாலுண்டு வந்த மேல் நாட்டார்கள் புலாலுண்ணல் பலநோய்கள் உண்டாதற்குக் காரணமெனக் கண்டு தற்காலம் காய்கனி கிழங்கு முதலியவற்றையே உபயோகிக்கிறார்கள். அங்ஙனம் உபயோகித்து வந்தமையால், அநேகர் திடகாத்திரமும் நீடிய ஆயுளும் பெற்றனரென்று அவர்களே கூறுகின்றார்கள். ஆதலால், புலாலைக் கைவிடுவதால் உடம்பு மெலிகின்றதென்பது சிறிதும் பொருந்தா வுரையாம். சிலர் வேதத்திற் குறிக்கப் பட்ட யாகத்திற் கொன்ற மிருகத்தின் மாமிசத்தை உண்ணு

தல் புண்ணியமென்பர். நமது தமிழ் வேதத்தில் 'அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்—உயிர்செகுத் துண்ணாமை நன்று' என்றருளிச் செய்யப்பட்டிருத்தலால், அவ்யாகம் சிறப்பில்லாமை தெரியலாகும். நூல்கள் கொலை செய்தவரும், புலாலை விற்ற வரும், புலாலை விலைக்கு வாங்கினவரும், புலாலைப் புசித்த வரும், புசிப்பித்தவருமாகிய எல்லாரும் பாவிகளே என முறையிடுகின்றன. ஆதலால், புலாலையுண்டு பாவிகளாய் நரகத்திலே நெடுங்காலம் துன்பம் அநுபவித்தல் நன்றோ? புலாலையுண்ணமல் தங்கள் உடம்பை வாட்டியேனும் நித்தியமாகிய முத்தியின்பத்தைப் பெற்றுமகிழ்தல் நன்றோ? என்பதனை நன்கு அறிதல் வேண்டும்.

இதனால், புலாலுண்ணல் யாருக்கும் எவ்வகையானும் தக்கதன் றென்பதும், புண்ணியர்களாகிய மக்கட் பிறப்பினர்க்கு அதனை நீக்குதலே அழகென்பதும் பெறப்பட்டன.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்."

மு. பொன்னம்பலம்,
தூத்துக்குடி.

## முயற்சி.

முயற்சியாவது அருமையான காரியத்தையும் பெரிய காரியத்தையும் சோம்பலின்றிச் சுருசுருப்பாய் ஊக்கத்துடன் செய்வதாம். முயற்சித்தால் நாமடையவேண்டு மென்று கருதும் எந்த வஸ்துவையும் அடைய முடியாமற் போகாது.

நம்மனேர்க்கு 'விதியின் பயனேபய' னென்ற கொள்கையானது முயற்சிக்கு பெருஞ் சாகர மாயிருந்து தடைசெய்கின்றது. 'விதியின் பயன்படி நடக்கும்,' 'வரவேண்டியது வந்தே தீரும்' என்று பலர் சொல்வது நம் செவிக்கேறி யிருக்கின்றன. ஜோதிடர் வாய் மொழியைத் தேவ வாக்காய்க் கொள்ளும் பலர் உள்ள முயற்சியையும் கைவிட்டு எத்தொழிலையும் செய்யாது முற்றுந் துறந்த முனிவர் போலிருக்கிறார்கள். இப்படி யிருப்பதனால் எந்த வஸ்து வாவது கிட்டுமா? கிட்டாது. தவிர எந்த வியாதி

யாளரையும் விதிப்படி நடக்கிறது நடக்குமென்று வைத்தியம் செய்யாது, விதிப்படி பிழைப்பான் அல்லது இறந்து விடுவானென்று விட்டுவிடலாமே. விதிப்படி நடக்குமென்று அழுத்தமாய்க் கூறுபவரை இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் வின விஞல் அவரும் கூடிய வரையில் ஔஷதம் கொடுத்து முயற்சி செய்து பார்க்கவேண்டுமென்றே கூறுவர். ஆனதால் முயற்சி வேண்டுமென்றே பெறப்படுகின்றது. இதனாலன்றோ பெரியார் "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்று கூறினர். பொய் யில் புலவர் "ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித் தாழா துஞற்று பவர்" என்று கூறியதனால் இடைவிடாது முயற்சி செய் வோர் விதியையும் விலக்குவர் என்பது கொள்ளக் கிடக் கின்றது.

இதைச்சிறிதும் கவனியாது விதிவிதியென்று மதியை மயக் கிக்கொண்டு வீணேயவல மடைகின்றோம்.

அன்றியும், "கடவுளீ குவனென் றெண்ணிநீத் தியமுங் கருதுறு முயற்சிசெய் யானே, லடலுறு செல்வ மடைகுவ னேகோ லருங்கலத் திட்டபா லடிசின், மிடலுடைக் கரத்தா லெடுத்துண தென்னன் வீக்கும்வெம் பசிப்பிணி யொழிப்ப, னுடல் பவந் தனக்கோ ராகர மாகி முடனனி வாட்டுமெய்த் தவத் தோய்" என்று குசேலோபாக்கியானம் கூறுகிறபடி முயற்சிக்கா மல் எதுவும் நடப்பது சாத்தியமாகாது. இந்தப்படி சாஸ்திரங் களில் சொல்லப்பட்ட முயற்சி பிரபலமென்பதை ஒப்பாவிட்டால், வைத்திய சாஸ்திரத்தைத் தொட்டு மோக்ஷ சாஸ்திரபரியந்தம் எல்லாம் வியர்த்தமாய்ப் போய்விடும். ஓரிடத்தில் முயற்சி பலன் கொடாதது கண்டு முயற்சி முழுவதும் துர்ப்பலமென்று சொல்வதுகூடாது; ஏனென்றால், ரோகியாயிருக்கிற புருஷன் ஔஷதம் சாப்பிட்டு அதனால் ரோகம் போகாதது கண்டு மறு படியும் ஔஷதம் சாப்பிடாமலிருக்கக் காணோமே? தவிர, இராஜா வானவர் ஓரிடத்தில் அபஜயம் கொண்டது கண்டு மறுபடியும் யானை, குதிரை முதலிய சேனைகளைக் கைவிட்டு விடவுங் காணோ மே? ஆனதால் முயற்சியை விடாது செய்தல்வேண்டும்.

இந்த விஷயத்தில் ஆநந்தபோத ஆசாரியார் நிரம்பவும் அழகாய்ச் சொல்லியிருக்கின்றனர். அது வருமாறு:—"அஜீரண

பயத்தினால் போஜனத்தையே விடுகிறவர்களாயும், பிச்சைக்காரனுடைய உபத்திரவத்தால் சமையலே வேண்டாமென்கிறவர்களாயும், வேலிகட்டப் பயந்து பயிரிடாதவர்களாயு மிருக்கிற புத்திமான்களுடைய புத்தி விசேஷத்தைக்குறித்துநாமென்னவென்று மகிழ்வோம்! ஆச்சரியம்! ஆச்சரியம்!!" என்றிப்படி விசேஷபரிகாசம் பண்ணியிருக்கிறார்கள். ஆகையினாலே முயற்சி துர்ப்பலமென்று ஒரு நாளும் சொல்வது கூடாது.

இதுவுமன்றி ஸ்ரீ வசிட்ட ராம சம் வாதத்திலே முயற்சியே பிரபலமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அஃதாவது "வாரீர், வ, இராமா! இந்தச் சம்சாரத்தையிலே எந்தக்காலத்திலும்புத்திரன், தனம், சுவர்க்கலோகம் பிரமலோக முதலான எந்தப்பலனும் புத்திர காமேஷ்டி, யாகம், சகுணப்பிரம உபாசனை முதலானவையும் நன் முயற்சியினால் யாவர்க்கும் சித்திக்கும். அந்த முயற்சி சாஸ்திரத்தால் நிஷேதிக்கப் பட்டதென்றும், அதனால் விதிக்கப்பட்ட தென்றும், இரண்டுவிதம். அவற்றுள், பரதனத்தை அபகரித்தல், பரஸ்திரியை விரும்பல் முதலானவை சாஸ்திர நிஷித்தமான முயற்சி; அதனால் நரக முதலான அனர்த்தம் வந்து நேரிடும். நிஷ்காமமாகத் தத் தம் வருணாசிரமத்துக்கு உசிதமான நித்திய கருமம், உபாசனை முதலானவை சாஸ்திர விகித முயற்சி; அதனாற் பரம்பரையாகப் பரமபுருஷார்த்தம் கிடைக்கும். ஆகையால் வாலியமுதற்கொண்டு செம்மையாய் அப்பியாசிக்கப்பட்ட சற்சாத்திரம், சாது சங்கம் முதலான நற்குணங்களோடே கூடிய தன்னுடைய நன்முயற்சியினாற் றனக்கிதமான புருஷார்த்தத்தை அடையவேண்டும்" என்று வசிட்டர் சொன்னார். அப்படிச்சொன்ன வசிட்டரைப் பார்த்து ராமர் சொல்லுகிறார் "வாரீர் குருவே! முன் என்னாலே செய்யப்பட்ட அதர்ம சம்ஸ்காரமாகிய வாசனைக் கூட்டம் (வினைப்பயன்) என்னை எப்படி ஆட்டிவைக்கிறதோ, அப்படியன்றோ நான் பரவசனாகி இப்போது நடக்கிறேன்; ஆதலால் நானென்ன செய்வேன் ஐயா!" என்றார்.

அதற்கு வசிட்டர் சொல்லுகிறார் "வாரீர் ராமா! யாதொரு காரணத்தினாலே நீர் வாசனை பரவசரோ அக்காரணத்தினாலே உம்முடைய உற்சாகமாகிய முயற்சியினாலே சம்பாதிக்கப்பட்ட மனோ வாக்குக் காய சன்னிய வியாபாரத்தினாலே தானே காலத்திரயத்தி

லும் நசிபாமல் நித்தியமாயிருக்கிற மோக்ஷத்தை யடைவீர்; வேறொன்றினாலேயும் அடையமாட்டீர்! வாரும் இராமா! வாசனை என்னை ஏவிவைக்கிறதென்றீரே! சுபவாசனை யும்மை யேவி வைக்கிறதா? (சுபவாசனை-நல்வினை) அல்லது அசுபவாசனை யேவிவைக்கிறதா? (அசுபவாசனை-தீவினை) சுபாசுப வாசனை ஏவிவைக்கிறதா? தர்ம சம்ஸ்காரமாகிய சுபவாசனையினாலே ஏவப்பட்டீரானால், அப்போதந்தச் சுபவாசனையினாலே தானே இந்த ஜன்மத்தில் முயற்சி விசேஷமாயில்லாமற் சீக்கிரத்தில் மோட்சத்தையடைவீர். அதர்ம சம்ஸ்காரமாகிய அசுபவாசனை உம்மை ஏவினால் அப்போதந்த அசுபவாசனையை அதற்கு விரோதியாயிருக்கிற இந்த ஜன்மத்தில் சம்பாதிக்கப்பட்ட சுபவாசனையினாலே சீக்ர ஜயிக்கவேண்டும். அஃது எப்படியென்றால்,

இராஜாவானவன் யுத்தத்திலே மந்திரிமுதலானவர்களைக் கொண்டு பரஸைன்யத்தை ஜயிக்கிறதுபோலப் பின்னொருவனாலே ஜயித்தல்கூடாது. தர்ம அதர்ம சம்ஸ்கார ரூபமான சுப அசுபமார்க்கங்களோடே கூடிய வாசனாநதியானது உம்மை அலைத்துவைத்தால், அப்போதந்த வாசனாநதியினுடைய அசுபமார்க்கத்தைபடைந்து சுபமார்க்கத்தோடே சேர்த்துவிடல்வேண்டும்.

இப்படி அசுபவாசனையில் நின்றுந் திரும்பின மனது சுபவாசனையை யடையும். சுபவாசனையினின்றும் திரும்பின மனது அசுபவாசனையை அடையும்; இதற்குத் திருட்டாந்தம் எப்படியென்றால்:—

மண்ணைத் தின்னாநின்ற குழந்தையை அந்த மண்ணைத்தின்னுவதினின்றுந் திருப்பிப் பழத்தைத் தின்னும்படி எப்படி செய்யலாமோ, முத்துமாலையைவேண்டி அழாநின்ற பாலனை அதினின்றுந் திருப்பிப் பந்தைக்கொண்டு எப்படிவிளையாடும்படி செய்யலாமோ? அப்படியே மனதையும் சற்சங்கத்தினாலும் துர்ச்சங்கத்தினாலும் கூட்டிவைக்கலாம்.

ஆதலாற்றன்னுடைய நல்ல முயற்சியினாலே அசுபவாசனையிலிருக்கிற மனதை சுபவாசனையிற் றிருப்பவேண்டும். இப்படி ஆயுளுள்ளவளவில் எவ்வளவு காலம் நீர் வேதாந்த விற்பத்தியில்லாததினால் பிரம சொரூபத்தை அறியவில்லையோ அவ்வளவு காலமும் குருசாஸ்திர பிரமாணங்களால் நிர்ணயம் பண்ணப்பட்ட

சுத்தவாசனையைப் பழகும். அதற்குமேல் அந்த அப்பியாசத்தினால் சுத்தசித்தராய்ப் பிர்மசொரூபத்தைக் காதலாமலகம்போல் நன்றாயறிந்து கொண்டு சகலதுக்கமுந் தீர்ந்து கிருதகிர்த்தியராய் விடுவீர்'' என்று இராமரைப்பார்த்து ஸ்ரீவசிட்டர் முயற்சியைப்பற்றி வெகுபலமாகச் சொல்லியிருக்கிற படியாலும்,

## விநாயக புராணம்.

''விடாது தனுவிற் செயுமுயற்சி
மேன்மேற் பொருளை மிகவளர்க்கும்
கெடாது சுற்ற நட்பினர்தங்
கிளையுந் தாங்கும் யாவர்க்கும்
தடாத வுபகா ரமும்புரியும்
தடந்தா மரையா ளையுஞ்சேர்க்கும்
படாத வூழ்வந் திறுகாறும்
பயனே விளக்கும் பழியின்றாம்.''

எனக் கூறுவதாலும், முயற்சியே எக்காரியத்திற்கும் முக்கியமானதாம்.

V சாட்சிநாதன்,
போஸ்டு மாஸ்டர்,
திருப்புறம்பியம்.

## தாய்ப் பாஷை.

கனவான் களே!

நம் அருமையான இந்தியாவின் குழந்தைகளாகிய நாம் எல்லோரும் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்னும் திராவிட பாஷைகளுள் ஒன்றைத் தாய்ப் பாஷையாகப்பேசி வருகிறோமல்லவா? அந்தப் பாஷைதான் நம் நாட்டில் பிறந்துவளர்ந்து தாலாட்டப்பெற்ற அருமையான பாஷை. அந்தப் பாஷையே நம் ஜாதி உயர்வையும், நாம் எந்த வகுப்பார், எந்த வமிசத்தைச் சார்ந்தவர் என்ற தன்மையையும் எடுத்துக் காட்டுவதாம். நாம்

இந்தமண்ணுலகில் பிறந்த அந்நாள்முதற்கொண்டு நம் அருமைத் தாயின் மடியின்மீது தாலாட்டப்பெற்றிருந்தபோது நம் அழகிய நீலவிழியை உயரத் தூக்கி அவள் முகத்தைப் பார்த்து "அம்மா" என்று வாய் விட்டுச் சொல்ல முயன்றது எந்தப் பாஷையில்? குழந்தைப் பருவத்தில் விஷமத்தனமே நிரம்பப் பெற்ற சமயத்தில் நம் தோழர்களுடன் குதித்து விளையாடி ஓடிப் பாடிக் களித்துப் பேசியது எந்தப் பாஷையில்? இப்போது நாம் உலகத்துடன் ஒத்து வாழக் காளைப்பருவம் அடைந்த சமயத்தும் ராஜபார்வையுடனும் கம்பீர நடையுடனும் வாழும்போது டாம்பீகமாகப் பேசுவது எந்தப் பாஷையில்? அது தான் நம் அருமையான தாய்ப்பாஷையாகிய தமிழ். பெரியோரால் எழுதிப் புகழப் பெற்ற காவியங்களைப் பழுதறப் பரிசோதித்த நல்லிசைப் புலவரிடத்தும், நம் மூத்தோரிடத்தும், மழலைச் சொல்லால் நம்மைக் களிப்பிக்கும் குழந்தைகளிடத்தும் அன்பாய்ப் பேசுவது நம் தாய்ப்பாஷையாகிய தமிழிலேயன்றி வேறு எதனிலும் அல்ல என்பதை யாவரே மறுப்பர்? வெள்ளிக்கம்பிபோன்ற நரைத்த தலைமயிரை யடைந்த நம் அந்திக்காலத்தும் பேசுவது தாய்ப் பாஷையே யாம். அப்பாஷையே நாம் சாகுந் தருணத்தில் கடைசியாய்க் குடிக்கும் ஒரு கிண்ணம்பாலும் ஜலமும் கொணர்ந்து கொடுப்பதாம். இவ்விதம் நம்மை மேன்மைப்படுத்திய நம் அருமையான தாய்ப்பாஷையை அலட்சியஞ் செய்தல் சகோதரனைக் கொலை செய்வதற் கொப்பாகிறது.

நாம் எல்லோரும் அதிகமாகவோ அல்லது சிறிதளவாகவோ அல்லது ஏதோ கொஞ்சமாகவோ தாய்ப்பாஷையைக் கற்றுவருகிறோம். நம்முட் சிலர் தமக்கு எழுதப்படிக்கப்போதுமான அளவே அதை அறிந்து கொள்ளுகிறார்கள். மற்றுஞ் சிலர் தங்கள் தனிப் பாடமாக நம் தாய்ப்பாஷையைப் பி. ஏ. பரீக்ஷைக்குக் காலேஜுகளில் படித்து, அதில் தாங்கள் முதலாவதாகவோ இரண்டாவதாகவோ அல்லது மூன்றாவதாகவோ தேறியுள்ளதாக மேலதிகாரிகளால் ஸர்ட்டிபிகேட்டுகள் கொடுக்கப்பட் டிருக்கிறார்கள். அவர்கள் அவைகளை ஒரு புறத்தில் எடுத்து வைத்துவிட்டுத் தங்களுடைய தாய்ப்பாஷை ஞானத்தைஎவ்வளவுவிருத்திசெய்திருக்கின்றார்கள் என்றும், இப்படிப் பார்த்தது தங்கள் மனத்திருப்தியை யுண்டாக்குகிறதா என்றும், தயைசெய்து சற்று யோசித்துப்

பார்க்கட்டும். இதனால் அவர்கள் ஒரு பொய்யையா சொல்லப் போகின்றனர்? அன்று. விருத்தி செய்யப்படவேண்டிய தங்கள் சுயபாஷா ஞானம் எவ்வளவு சிறுமைப்பட்டுச் சரி தப்பிப்போய் விட்டது என்பதைத் தங்கள் மனமே தங்களுக்குச் சாட்சியாய்ச் சொல்கிறது என்பதை நான் திடமாய்ச் சொல்லாமல் இருக்கக் கூடவில்லை. ஸெனட் ஹாலில் வருஷாவருஷம் தேறித் தங்கள் கைகளில் அதிகாரப் பத்திரங்கள் எடுத்தவர்களாய்ப் புஜங்களில் 'கவுன்'கள் துலங்க வெளிப்போந்த நூற்றுக்கணக்கான இளைஞர்களில் சிலரே தங்கள் தாய்ப்பாஷைகளை மறவாது அறிந்துகொள்ளுகிறார்கள். அவர்களைப் போன்ற மற்றையர்கள் தங்கள் தாய்ப் பாஷைகளைக் கற்பதென்றாலோ விஷ ஜுரத்திற்குக் கசப்பு மாத்திரைகளை விழுங்குவதற்கு ஒப்பாக எண்ணுகிறார்கள்.

நம் முன்னோர்கள் அலட்சியஞ் செய்யாது வருந்திக்கற்ற தாய்ப்பாஷையை நாம் அலட்சியம் செய்கிறோம். நம்முடைய சந்ததியை நாம் நம்மைப்போலவே வளரவிடுவது எவ்விதம் முறையாகும்? நாகரிகமுள்ளவர்கள் என்று கருதப்படுகிற நாம் நம்முடைய முக்கியக் கடமைகளைச்செய்ய எவ்வாறு தவறிவிட்டோம்? நம்முடைய சொந்தப் பாஷைக்குக் கவனஞ் செலுத்தாது போனதின் காரணம் என்னவோ? இராஜ பாஷையாகிய இங்கிலீஷ் அடைந்திருக்கிற கௌரவம் தாய்ப்பாஷை அடையவில்லை போலும்! இது தெய்வத்தன்மை பொருந்தியதன்றோ? முன்னம் நான் இத்தப் பாஷையில் பயின்றிருந்தால் நம்முடைய முன்னோர் பழக்க வழக்கங்களையும், பாரம்பர்யத்தையும், தேச சரித்திரத்தையும், எவ்விதம் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்? நம்முடைய ஸ்திரீகளை எவ்விதம் முன்னேற்றத்திற்குக் கொணர்ந்திருக்கலாம்? நம் தேசத்தாருடனும், அந்நிய தேசத்தாருடனும் ஒழுக வேண்டிய விதத்தையும், நம் தேசத்திற்காக நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம் என்பதையும் எளிதில் தெரிந்துகொள்ளாதிருப்பதுவும் நம் தேசபாஷையை ஆதியில் கல்லாத குற்றத்தினாலேயாம்.

ஆகலின், நாம் நமது தாய்ப்பாஷையைக் கற்று முன்னுக்கு வரவேண்டும்.

# குசேலோபாக்கியானம்.

(முன் தொடர்ச்சி.)

சுசிலாய் ! மைந்தர்களைப் பாதுகாக்கச் செல்வம் வேண்டுமென்று கூறுகின்றனை. பறவைமிருகம்முதலியவற்றிற்கு அவைதம்முயிர்க்குக் காவலாக ஏதேனும் புதையலிருக்கின்றதோ; அல்லது வருவாயிருக்கின்றதோ? அவை எவ்விடத்திற்கேனும் சென்று இரப்பதுண்டோ? இல்லையே யன்றோ? அவற்றிற்கு நாளைக்கென்ன செய்வோ மென்னுங் கவலையாவதிருக்கின்றதோ? அவற்றுள் ஒன்று மற்றொன்றின் உணவை அபகரித்து வாழ்தலிருக்கின்றதோ? அப்பிராணிகளுள்ளே உணவில்லா திருந்தது இருக்கின்றதோ? கூறக்கடவாய். மென்மைத் தன்மையுடையாய்! கல்லினுள் வசிக்கும் சிறு தேரைக்கும் கருப்பையினும் முட்டையினுமுள்ள பிராணிகளுக்கும் உணவினை யளித்து அவற்றைப்பாதுகாக்கும் கண்ணபிரான் உனது புதல்வரைப் பாதுகாவாது விடுவனோ? விடான். இது சத்தியம்.

ஆகையால் நீ கொண்ட துன்பத்தை விட்டொழி; அதனை மறந்தும்நினையாதே. நறுமலரணிந்தகூந்தலையுடைய நங்காய்! கல், கருப்பை முதலிய விடங்களிலுள்ள பலவேறு திறத்தன வாய பிராணிகட்கெல்லாம் நாம் உணவு தருவதேயில்லை; அவை உணவின்மைபற்றி மடிகின்றனவோ? இல்லையன்றோ? அப்பிராணிகள் அவ்வாறிருத்தல் இயல்பாமெனின், அவை பூமியிற் பிறந்தபொழுதே ஜலமலம்விடுகின்றனவே;உணவில்லாவிட்டால் ஜலமலம் விடுதல் பொருந்துமோ? இதனை யோசித்துப்பார். சாஸ்திரார்த்தங்களை யறிந்த பெரியோர் பிரமன்எழுதிவைத்த ஆயுளின்எல்லையளவும் பிராணிகள் தத்தம் வினைக்குத்தக்கவாறு விருப்புணவையும் வெறுப்புணவையும் பெறுகின்றன: பெறாவிடின் அவை உடம்போடு கூடிவாழ்தல் இல்லையாம் என்று கூறுகின்றனர். ஆகலால்,பூங்கொம்பன்னாய்! நின்மைந்தர்க்கு ஆயுளுள்ள வளவுப் அவர்தம் வினைக்குத் தக்கவாறு உணவு கிடைக்கும். அதுபற்றி நீ மதி மயங்காதே. எது நேரிட்டாலும் அஃது ஊழினால்நேரிட்டதென்று நினைந்திருத்தல் வேண்டும்.

மெய்ந்நூலுணர்ச்சி சிறிது மில்லாதார் மிக்க செல்வத்தைப் பெற்றிருக்கின்றோமென்றும், அழகுள்ள மனைவியை யுடையோமென்றும், அளவில்லாத மக்களைப்பெற்றோமென்றும், சுகாநுபவத்தோடு வாழ்கின்றோமென்றும், இளமைப் பருவத்தால் சிறந்திருக்கின்றோமென்றும், எழிற்சியும் அழகும் உடைத்தாயிருக்கின்றோமென்றும் மிகுதியாக மனக்களிப்படைகின்றனர். பிராணிகளை வதைத்தல், உண்ணும்உணவை மாறுபாடு செய்தல், நண்பரிடத்து வஞ்சனை செய்தல், நல்லோரை யிகழ்தல், பொய்ச்சாட்சி சொல்லுதல், ஆலயங்களிற் பிரவேசித்துக் களவு செய்தல் என்றற்றொடக்கத்துப் பலதீமைகளையும் மக்கள் செய்து தம்வாணாளை வீணாக் கழிக்கின்றனர். அவர்கள் அத்தீச்செயல்களை யெல்லாம் செய்வது எதன்பொருட்டு? பொருளின் பொருட்டேயாம். அவர்கள் அப்பொருளைப் பெற்றால் அதனை அநுபவியாது குவியலாகப் பூமியிற் புதைத்துவைத்து, மிகவும் களிப்படைந்து, பாதுகாத்து, பணப்பேய் என்னும் நாமத்தையும் பெறுகின்றனர். அவர் மிகச் சிறிதாகவேனும் தருமஞ்செய்பார்; யாசிப்போர் வந்து கற்பகவிருக்ஷத்தை யொத்த கரதலமுடையானே! என்று தம்மை மேம்படுத்திக் கூறினாலும், அதனை யேற்றுக் கொள்ளாது சற்றேனும் கருணையின்றி அவரைத்தமது வீட்டினெல்லையைக் கடக்கும்படி துரத்தித் திரும்புவர். இத்தன்மையர் செல்வத்தைப் படைத்தும் யாது பயனைப் பெற்றனர்? ஒன்றுமின்றன்றோ? செல்வமுடையவர்க்கு நீதி தவறிய அரசர் கோபிப்பாராயின் மிகவும் அச்சமுண்டாகும்; கள்வராலும் தீயாலும், மிகவும் அச்சமுண்டாம்; தமது பங்காளிகள் தமது செல்வத்தைக் கவர்ந்து விடுவாரோ வென்னும் அச்சமுமுண்டாம். ஆகலால் இவர் உண்மையிற் பொருளைப் பெற்றாரல்லர். பின் எதனைப் பெற்றனர்? அச்சத்தையே பெற்றிருக்கின்றனர்.

பொருளானது தன்மீது பற்றுள்ளார்க்கு நல்லொழுக்கமுடையாரைத் தீயொழுக்க முடையாரென்றும், தீயொழுக்கமுடையாரை நல்லொழுக்கமுடையாரென்று முரைக்கச்செய்யும்; கற்புள்ள மாதரது கற்புக்கஞ்சாமையைச் செய்யும்; இன்னும் பலவகையாய துன்பத்திற் கேதுவாய காரியங்களையும் அவர் செய்யச் செய்யும். துடியிடை நங்காய்! பெருஞ்செல்வமுடையார் தமது உயிர் கொண்டு போகவந்த எமதூதர்க்குக் கோடி பொன்

கொடுக்கின்றேன்; இதனை இப்பொழுதே நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்! எனது உறவினருக்கு ஒரு வார்த்தை சொல்லி விரைவில் வருகின்றேன் என்று கூறினாலும் அத்தூதர் அவரைத் தமது பாசத்தால் கட்டுவதை விட்டுநீங்குவரோ? அப்போது பொருளால் அடையும் பயன்யாது? ஒன்றுமின்றன்றோ? இதனை நீ சிந்தனை செய்துபார். பொருளானது தன்னையுடையவர்க்குப் பற்றுக்களையெல்லாம் உண்டாக்கும்; தெய்வ சிந்தனை நீங்குமாறு செய்து மேம்பட்டு நிற்கும்; நித்திரையையும் நீக்கச் செய்யும்; மீண்டும் அவரைத்தாயின் கர்ப்பத்துள்ளும் புகச் செய்யும். இத்தன்மையவாய குற்றங்கள் பொருளால் உண்டாவதாற்றான் அதனைப் பெரியார் † வெறுக்கையென்று கூறினர். செல்வம் வந்தபோது கர்வத்தால் மூடப்பட்டு வாயுள்ளார் ஊமையாகின்றனர்; செவியுள்ளார் செவிடராகின்றனர்; கண்ணுள்ளார் குருடராகின்றனர்.

பாவைபோன்றவளே! பாக்கியமானது சூரியன் உதயமாய் அஸ்தமிப்பதுபோலப் பிறந்திறக்கும் மனிதரைவிட்டுப்பிரியும். அதனால் அது ‡ செல்வமென்று சொல்லப்படுகின்றது. அப்பெயர் அதற்குரியதே. அது துன்பத்தை யுண்டாக்குவதாம். ஆதலால் அதுமிகப் பொல்லாதது. ஆனல், துளசிமாலையைபணிந்து, திருமகள் வருடுவதாற் சிவந்து, அன்பரது கருத்திலுட் பிரவேசித்து வாழுகின்ற கண்ணபிரானது திருவடியை யடைதலே பெருஞ் செல்வமாம். தாம் பொருள் படைத்த காலத்தில் தேவாலயத்திற்கு அதனை யீந்தும் புராணேதிகாஸங்களை அன்போடு கேட்டு மகிழ்ந்தும் இரப்போர்க்கு இல்லை யென்னாது ஈந்தும் ஒழுகுவோருளராயின் அவர்கள் எமதண்டத்துக்குத் தப்பிக் கடவுளது ஆநந்தக் கடலில் மூழ்குவார்கள். மாதரது துன்பமுள்ள வடிவமானது குடரும், உதிரமும், எலும்பும், கொழுப்பும், நிணமும், தோலும், நாடிகளும், மாமிசமுங் கொண்டு நடக்கும் மலபாண்டமாகும். இம்மல பாண்டத்தின் பொருட்டு உலகத்தார் மனமயங்குகின்றனர். அந்தோ! ஈதென்னபாவம்? மலக்குழம்பானது கண் காது முதலிய பல துவாரந்தோறும் வடியும் குடமும், மூத்

---

† வெறுக்கை - வெறுக்கப்படுவது.

‡ செல்வம் - (யாம் உம்மைவிட்டுச்) செல்வோமென்னும் பொருளுடையது.

திர பாத்திரமும், பலதிறத்தனவாகிய புழுக்கள் நெருங்கிய துர்க்கந்த முடைய கூடுமாகிய இம்மாதாது உடம்பின் அழகைக் கண்டு மயங்குவோர் மயங்கி நிற்கக் கடவர். தாழ்குழலமைந்த தையலே! இம்மைந்தரை முன்னர் எத்தனை பேர் எம்மைந்தரென்று முறைமை பாராட்டினரோ? இன்னமும் எத்தனை பேர் இவர் எம்மைந்தரென்று முறைமை பாராட்ட நிற்கின்றனரோ? அம்முறைமை பாராட்டுதலை வரைபறுத்துச் சொல்லுதல் முடியாது. ஆகையால், அப்புத்திரரை எம் புத்திரரென்றுகூறுதல் மிகவும் அறியாமையாகும். குழந்தையைப் பெறுங்காலத்திலும் துக்கமே; அதனை வளர்க்கிற காலத்திலும் துக்கமே; அதற்கு நோய் வந்த காலத்திலும் துக்கமே; அதற்குப் பருவம் வந்த காலத்திலும் துக்கமே; அஃதிறந்த காலத்திலும் துக்கமே. எப்பொழுதும் அதனால் துக்கமேயானால் அக்குழந்தையால் சுகமடைதல் எப்போது? (ஒருபோதுமில்லை). இளமைப் பருவத்தில் புத்திரர், தாய்தந்தையர் செய்கிற தண்டனையை ஏற்றுக்கொள்ளுகின்றனர்; தாம் வெறுக்கத்தக்க காரியத்தில் அவர் செலுத்தினும் உள்ளம் நடுங்கி அவர் தம்மையே மிகுதியும் பற்றியிருக்கின்றனர்; காளைப் பருவத்தை யடைந்தாலோ தம் தாய் தந்தையர் நடுங்குமாறு கோபித்துத் தம்மனம் போனவழியே நடந்துவருவர். புத்திரர்க்குப் பிறவிதோறும் வருகின்ற தாய் தந்தையர் அளவிறந்தவராவர்; அவர் பிறக்குமூர்களுமோ அளவிறந்தனவாம். அவர்க்கப்போதுகிடைத்த உறவினரும் அளவிறந்தவராவர்; அப்போதவர் பெற்றபேர்களும் அளவிறந்தனவாம்; அவர் செய்யும் நல்வினை தீவினைகளின் பெருக்கமும் அளவிறந்தனவாம்; அவர்கொண்ட சிறப்புகளும் அளவிறந்தனவாம்; இனியும் அவைபோல் அவர் அடைதற்குரியன அளவிறந்தனவாம். (வரும்).

## பூங்காவனம்.

(முற்றொடர்ச்சி)

### ஏழாம் அதிகாரம்.

நிலாவரை வாவிக் கரையில் பூங்காவனமும் அருட்பிரகாசமும் சில நிமிஷங்கள் வரையாதும் வசனியாது மௌனமாக நிற்கின்றார்கள். ஆ! திங்கான நிலைபரம். எவ்வளவு கலக்கடி? இவர்

கள் முன்னொருமுறை எவ்வளவாக நேசித்திருந்தவர்கள்? இவர்களுடைய எண்ணங்கள் வாக்குக் கெடாததாக விருக்கின்றன. பூங்காவனத்தின் அழகிய சரீரம் சந்திர காந்தக் கல்லைப் போல வெளுப் படைந்து விட்டது. அருட்பிரகாசத்தின் கன்னங்கள் இயல்பாயுண்டான எழிற்சியைக் காட்டின. இரு கன்னங்களும் சுயரோகத்திலுண்டான நிலையுள்ள செக்கிறமாக விருந்தன. அவனுடைய கண்களினின்றும் நெருப்புப் பொறிகள் சிந்திக் கொண்டிருந்தன. வருமென்று முன்னர் நினைத்திருந்த சந்திப்பு வந்து விட்டதாக அவனுக்குத் தோற்றியது; அப்படி அறிந்திருந்தும் அது வந்த வுடன் ஏற்றுக்கொள்ள ஆயத்த மில்லா திருந்தனன்; மனந்தடுமாறியது; தன்னுடைய உணர்ச்சியை அடக்க இயலா தவனுயினுன். அவன் சாடையாய் நாற்புறமும் நோக்கி அங்கொருவருமில்லாமல் தாங்கள் இருவரும் தனித்து நிற்பதை அறிந்தான். சில நிமிஷங்கள் சென்றன; இருவரும் நின்ற இடத்திலே நிற்கின்றுர்கள். பூங்காவனம் அவ்விடத்தில் நின்ற படியே நீரூற்றைப் பார்த்துக்கொண்டு நின்றுள். அவளுக்கு உண்மையாக வேறொன்றும் தோன்ற வில்லை. அருட்பிரகாசம் இனிமேல் ஒருவாலும் தடுக்கக் கூடாத அதிக உற்சாகமான உணர்ச்சியுடன் அவளைக் கவனித்த படியே நின்று பூங்காவனமே! என்று அழைத்தான். அந்தச் சொல் மாத்திரம் அவனுடைய உதடுகளிலிருந்து வெளிப்பட்டது. அவன் அதற்குப் பின் ஒன்றும் சொல்லவில்லை. திரும்ப என்ன சொல்லுகிற தென்றும் அவனுக்குத் தோற்ற வில்லை; தனது மனப்பாரத்தைக் குறைக்கும்படி இலக்ஷக் கணக்கான காரியங்களை அவளுக்குச் சொல்லவேண்டியிருக்கிற தென்றும் அறிந்தான். அவனுடைய உதடுகளினிருந்து பிறந்த நாமம் பூங்காவனத்தை நடுங்கச் செய்து விட்டது. அவனுடைய தொனி கனிந்துருகுகின்றதாயும் துக்க முகில்களால் மூடப் பட்ட தாயு மிருந்தது. அப்பொழுது:—

அருட்பிரகாசம்:—நாம் இருவரும் தற்சமயம் தனித்து நிற்கின்றோ மல்லவா?

பூங்காவனம்:—(தலைகுனிந்த படியே தெளிவான சத்தம் இன்றிக் கேட்கக் கூடாத அவ்வளவு மெதுவாய்) நாம் தனித்திருத்தல்கூடாது.

அருட்பிரகாசம்:—ஏன் நாம் தனித்திருத்தல் கூடாது? உன்னுடைய மனச்சாட்சியே நான் குற்றம் சொல்ல வந்திருக்கிறே னென்றும் அப்படிக் குற்றஞ் சாற்றுபவனுடைய முகத்தில் விழிக்கக் கூடாதென்றும் சொல்லுகிற தல்லவா ?

பூங்காவனம்:—சிறிது நேரஞ்சென்றபின் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்துப் பெருமையாய் அப்படி யல்ல அருட் பிரகாசமே என்ற வுடன், மீண்டும் தலைகுனிந்து செவிகளுக்கெட்டாத தெளிவான குரலுடன் நீர் என் மீது அருவருப்புக் கொண்டு என்னைத் துரோகி என்று நம்புகிறதாகத் தோற்றுகின்றது. சர்வ வல்லவரான பெருமானே! அது அப்படி அல்ல; ஒருபோதும் இல்லை என்றனள்.

அருட் பிரகாசம்:—(ஆச்சரியத்தோடு) என்ன பூங்காவனமே! என்னை அறியாமை யுள்ள மூடனென்று நினைந்து தீமையின் மேல் அவமானத்தையும் ஏற்றுகின்றாயா ?

பூங்காவனம்:—(மீட்டும் தலையை நிமிர்த்துத் தன்னுடைய குற்ற மற்ற பார்வையால் அவனைப் பார்த்து) அருட்பிரகாசமே! இரட்சிக்கப் படும்படி ஒரு ஆன்மாவை வைத்திருக்கின்ற படியாலும் இப்போது என்னுடைய வார்த்தைகளைக்கேட்கவும் பின் அதற்குத் தண்டனைசெய்யவும் முற்றறிவுடைய எம்பெருமான் இருக்கின்றார். நான் வேண்டு மென்று உம்மை ஏமாற்ற வில்லை; நான் ஒரு போதும் குற்ற வாளியல்ல.

அருட்பிரகாசம்:—(கண்களினின்றும் கோபாக்கினி சொரிய உக்கிரத்தோடும்) பூங்காவனமே! நீ ஏமாற்றப்பட் டிருப்பாயானால் அப்படிப் பட்டவர்களின் சிரசின் மீது ஆயிரம் சாபம் என்றனன்.

பூங்காவனம்:—(நடுநடுங்கி மிகுந்த துக்கத்துடன்) அருட்பிரகாசமே ! போதும்; காலஞ் சென்று போன எனது பிதாவின் மீது சாபங்களை ஏற்றவேண்டாம்.

அருட்பிரகாசம்:—ஆ! கடவுளே! எல்லாம் பூரணமாகத் தெரிகின்றது என்று கூறி அல்லோல கல்லோலப் பட்டு நின்ற மூளையைச் சரிப்படுத்தும்படி தன் புருவத்தைத் தடவினான்.

பூங்காவனம்:— (தன்னைச் சுத்தம் பண்ணத்தக்கதான சமயம் வந்து விட்ட தென்று துணிந்து) அருட்பிரகாசமே! நான்

அனியாயமாக ஏமாற்றப்பட்டு விட்டேன்; மனுஷனுடைய எண்ணத்தை அறியக் கூடிய கடவுளுக்கு மாத்திரமே நான் எவ்வளவ உண்மையுள்ளவளாக விருந்தே னென்பது தெரியும். நீர் இங்கில்லா திருக்கும் பொழுதும் ஆழமான சமுத்திரத்தில் மூழ்கி இறந்து போனீ ரேன்ற பயங்கரமான சம்பவத்தைக் கேட்ட பின்னும் உம்முடைய உருவத்தைச் சீராட்டினே னென்பதை ஒரு தெய்வத்தன்மை பொருந்தியவர் உமக்கு முன்பாக வந்துநின்று சாட்சி சொன்னாற்றான் உண்மைவெளிப்படும். நான் இன்னொருவனுடையவளாவதற்குமுன் நீர் உயிருடன் இருக்கின்றீரென்ற பயங்கரமான உண்மை எனக்கு வெளிப்படவில்லை. இது சத்தியம்.

அருட்பிரகாசம்.—மாதே! இதைக் கேட்க துக்கமாகவிருக்கின்றது. நான் உனதுபிதாவுக்கு இரண்டுகடிதம் எழுதினேனே?

பூங்காவனம்:—(துக்கத்துடன்) அதை நான் அறிவேன். என்னுடைய தந்தையார் என்னை ஏமாற்றிவிட்டார். ஆனால் அவரை மன்னியும்.

அருட்பிரகாசம்:—பூங்காவனமே! நான் உன்னை நம்புகின்றேன்; உன்னுடைய பார்வையில் உண்மை யிருக்கின்றது; உன்னுடைய வார்த்தைகளிலும் உண்மை யிருக்கின்றது. அந்நாளில் உன்னை என்னுடையவளாக்க வெண்ணி நான் இங்கு வந்தபோது அங்கு சமாசாரப் பத்திரிகையில் உன்னுடைய விவாகத்தைப் பற்றி வாசிக்கும் வரையில் நீ எப்பொழுதும் உண்மையுள்ளவள் தான் என்று நம்பி யிருந்தேன். சில மணிநேரம் வரையிற் பயித்தியம் பிடித்தவன் போலாய் ஈற்றில் தற்கொலை செய்ய எத்தனித்தேன்; அதைச் சத்திரக்காரர் தடுத்துவிட்டார்கள்.

பூங்காவனம்:—அருட்பிரகாசமே! இவைகளெல்லாவற்றையும் எனக்குச் சொல்ல வேண்டாம்; நான் தாங்க முடியாதவளாய் இருக்கிறேன்; உம்முடைய மரணத்தைப் பற்றிக் கேட்ட நிமிஷ முதல் எனது ஜீவியம் துக்கமாய் வந்து விட்டது. ஒருவனுக்குச் செய்யும் சித்திரவதை அவனை மணித்தியாலங்கள் அல்லது நாட்களாய் வேதனைப்படுத்தி உயிர் நீங்கும் வரையில் நிலைக்கும். அருட்பிரகாசமே! நான் அனுபவிக்கும் சித்திரவதையோ இரண்டு வருஷமாக நிலைத்து விட்டது; இறந்த பின் தான் எனக்கு மன ஆறுதலுண்டு என்றனள்.

அருட்பிரகாசம்:—பூங்காவனமே! உன்னை ஆறுதலாயிருக்கும் படி சொல்லவும் இப்படிப் பட்ட பயங்கரமான கதைகளைக் கூறவேண்டுமென்றும் நானே சொல்லுகின்ற காலம் வந்துவிட்டது. பூங்காவனமே! நீ என்னை மன்னித்தருளுவாய்; நான் உன்னளவில் கடுமையாயும் மிருகத்தன்மையாயும் நடந்து விட்டேன். (கடவுளே! என் செயலல்ல என்று மறுபடியும் கட் புருவத்தைத் தடவுகின்றான்.) நான் கோலாலம்பூரில் சமுத்திரத்தில் மூழ்கிய போது அதிசயப் படத்தக்கவிதமாய் உயிர் பெற்றேன்; என்னைத் தவிர உடன் வந்தவரனைவரும் இறந்தார்களென் வதந்தி ஆங்கில வர்த்தமானப் பத்திரிகைகளில் வெளிப்படுத்தப் பட்டிருக்குமென்றே நினைத்தேன். அந்த வருத்தத்தினுல் அநேக வாரங்களாக அறிவில்லாதவனுயிருந்து சுகப்பட்ட வுடன் உன்னுடைய தந்தையாருக்குக் கடித மெழுதச் சிறிதும் தாமதிக்கவில்லை. அந்தக் கடிதம் வண்ணமாபுரியைக் கிட்டிச் சேருமுன் என்னைப் பற்றியபயம் உன்னை விட்டு நீங்கிவிடுமென்று எண்ணியிருந்தேன். அப்படி யல்ல வென்று என்னுடைய மரணத்தைப் பற்றி உன்னுடைய தகப்பனுர் உனக்கு என்றைக்கும் அப்படியே இருக்கும் படியே செய்து வைப்பாரென்று மனிதனுக்கு எட்டியதல்ல. அந்நாளில் ஆ பூங்காவனமே! உன்னைக்காண வரவேண்டிய மாசங்களையும் வாரங்களையும் மணித்தியாலங்களையும் மெத்தக் கவனமாக எண்ணிக் கொண்டிருந்தேன். (என்று மறுபுறந்திரும்பினுன். அவனது அழுகைச் சத்தம் பூங்காவனத்தின் காதுகளுக் கெட்டியது). அடிமேல் அடி அடித்தாற்போல அவளது மூளை தடுமாறி இருதயம் தாங்க முடியாத துக்கத்தி லாழ்ந்தது. அவள் தான் இன்னொருவனுடைய மனைவி யென்றதை எண்ணினுள். சிறிது நேரஞ் சென்றபின் அருட்பிரகாசம் ஆறுதலடைந்தவனுய் ஆ! பூங்காவனமே! நான் உன்னை நேசித்திருந்தது போல வேறொருவரும் நேசித்திருக்க மாட்டார்கள்; கடைசியாகஇலங்கைவந்துசேர்ந்தேன். அப்போதுஎன்மனம் தாங்கமுடியாதசந்தோஷமாகவிருந்தது. ஒருதேனீ தான்இருந்த புஷ்பத்திலிருந்து தேனை உண்ணும் பொழுது எவ்வளவு சந்தோஷமாகவிருக்குமோ அவ்வாறே உன்னைப்பற்றி யெண்ணும்பொழுது அவ்வாறுன நிலைமையிலிருந்தேன். அப்படியே இருதயமும் இனிமையான எண்ணங்கள் நிரம்பியதாக விருந்தது. மனித இருத

யத்தின் அலங்காரமானபுஷ்பம்போல உனதுநேசத்தில் நான் சந்தோஷப்பட்டிருந்தேன். நீ இன்னொருவருடையவளாக்கப்பட்டாயென்றதை அறிந்தபின், இனிமையுடன்தேஞ் நுகர்ந்துகொண்டிருந்ததேனீயின் மீது முரட்டுத்தனமான கைவந்து அந்த எளிய ஜெந்துவைப் பிடித்து அதன் இறகுகளைப் பிடுங்கி இனிமேல் அப்புஷ்பத்தின் தேனை நுகராத படியும் சதாகாலமும் துக்கத்திலாழ்ந்திருக்கும் படியாயும் எறியப்பட்ட அத்தேனீயைப் போலிருந்தேன். ஆனல் எனக்கு அப்படிச் சம்பவித்தது இந்த இருதயத்திலிருந்ததென்று தன்மார்பில் ஒங்கி அடித்துப் பூங்காவனமே! உன்னை இவ்வளவாக நான் வருத்தினதைக் கடவுள்மன்னிப்பாராக. இன்னும் சிறிது கூறவேண்டியிருக்கின்றது. அஃதாவது நீவிவாகஞ்செய்து கொண்டாயென்றும் அதுவும் எனது பெரிய தந்தையாரையேயென்றும் நான் புதினப் பத்திரிகைகளில் வாசிக்கும் பொழுது (திரிகோண மலையிலிருந்தேன்.) நீ எனக்கு நம்பிக்கைத்துரோகம் செய்து விட்டாயென்றேயல்லாமல் வேறென்ன நினைப்பேன்? உடனே என்னை வேறொரு இடத்துக்கு மாற்றிவிடும் படி கோலாலம்பூர் அரசினரை மின்தபால் மூலமாக மன்றாடிக் கேட்டேன்; ஏனென்றால் அவ்வூர் நன்பர்களுடைய முகத்தில் விழிக்க முடியாமையினாலேயே உடனே என் விண்ணப்பப் படியே காருண்ய அரசினர் சென்னைக்கு மாற்றிவிட்டனர். அவ்வளவு விரைவாய் நெடுந்தூரத்துக்கு மனுஷன் பிரயாணம் பண்ணியிருக்க மாட்டான். மூர்க்கமான சிங்கம் தலை தூக்கிக்கொண்டு வரும்பொழுது அதினின்றும் தப்பித்துக் கொள்ள ஓடுபவனைப் போல விரைவாகச் சென்று உத்தியோகத்தைக் கையேற்று இரண்டு வார மானவுடன் ஈற்றில் அங்கிருந்து பிரதானமான அலுவலாக இலங்கைக்கு வந்தேன். அது உனக்குத் தெரியும். கடைசியாய் உன்னை ஒருமுறை கண்டுபோவோமென்றெண்ணினேன். அவ்வளவு அதிகமான நேசத்துக்கு மாருய் உனது விசுவாசகாதகத்திற்குப் பேச்சுக் கொடாமல் விடுவதும் சரியல்லவென்றும் என்ன இடர்வந்தாலும் உன்னைக் காண்பேனென்றும் நினைத்தேன். பூங்காவனமே! வேறொரு நியாயமுண்டு; அஃதாவது நான் முன்னர்த்தந்த கணையாழியை மாற்றிக்கொண்டு உனது கணையாழியைத் திருப்பித் தரவும் வேண்டுமென்றே யெண்ணினேன் என்றனன். அப்பொழுது பூங்கா

வனம் முன் பரமானந்தத்திற் குரியதாயிருந்த தொடர்ச்சியைத் தற்போது அற்பமேனும் இல்லாதபடி விலக்க எண்ணி அருட் பிரகாசமே! உனது மோதிரத்தை ஏற்றுக் கொள்ளுமென்று வஸ்திரத்துள் மறைத்து வைத்திருந்த கணையாழியைக் கொடுத்ததும், அவன் இல்லை, அதைத் திருப்பி வாங்கமாட்டேன்; இனி மேல் நாம் ஒருவர்க்கொருவர் எப்படி யிருந்தாலும் கணையாழியை நீயே வைத்திரு; நானும் அப்படியே வைத்திருக்கிறேன். அதனால் ஒருபாவமு மில்லை என்றான். அவள் ஆலோசித்துக் கணையாழியைத் தன்னிடமே வைத்துக் கொண்டாள்.

சிறிது நேரஞ் சென்றவுடன் அருட் பிரகாசம் சடுதியாகப் பூங்காவனமே! நீ எப்படிப் பெரிய தந்தையாரைவிவாகஞ் செய்து கொண்டாய்? உன் இருதய சுத்தத்துக்கு மாறாக வருமென்றது விளங்க வில்லையா? எனவும் அவள் தடுத்து அருட் பிரகாசமே! என்மேற் குற்றஞ் காட்டுதல் வேண்டாம். நான் விடையளிக்கக் கூடாத கேள்விகளொன்றுங் கேட்க உம்மால் இயலாது. ஒவ்வொன்றுக்கும் கபடமின்றி உண்மையாய் விடைகூறுவேன். ஓ! என்னுடைய முகாந்திர மில்லாவிட்டால் எல்லாவற்றையும் நிச்சயமாய் மறைக்கமுயல்வேன். இப்படிக் கேள்வி கேட்கும் பொழுதே என்ன பெருமைக் குறைவென்பதாய்க் காட்டுவேன். ஆனால்என்னுடைய ஆன்மா குற்ற மில்லாதிருக்கும்பொழுது அக் குற்றங்களை மறைத்தற்கு ஏதும் சாக்குப்போக்குச் சொல்லவேண்டியதில்லை. என்னை ஒருபோதும் மீட்கக்கூடாத வலையில் அகப்படுத்த என் தந்தையார் எவ்விதத் தந்திரங்கள் செய்தனரென்பது உமக்குத் தெரியாது. நான் என்னுடைய பிதாவின் மீது குற்றஞ் சாற்றியதைக் கடவுள் மன்னிப் பாராக; ஆனால் இது முழுவதும் உண்மை; உம்முடைய பெரிய தகப்பனார்தான் எனது நாயகர் என்பதை மெத்தப் பிந்தித்தான் அறிந்தேன் என்றனள். பூங்காவனத்தின் பேச்சுகளில் பூரண நம்பிக்கையுடைய வனாயிருந்த அருட் பிரகாசம் சடுதியாய்நம்பிக்கை யீனப்பட்டவனாய்ப், பொறு பொறு நீ எனது பெரிய தந்தையாரை நன்றாக அறிந்து விவாகஞ்செய்வதற்கு இடையில் ஒருநாளாவதுஎன்னைப் பற்றி அவர் ஒன்றும் கூற வில்லையா? என்னம், ஒருபோது மில்லை, தமது பந்துக்களைப் பற்றிய விபரம் ஒன்றும் அவர் கூறவில்லை. சடங்கு இரகசியமாய் நடத்தப்பட்டதென்பது

உமக்குத் தெரியாதா என்றனள். அது சரி; விவாகம் நடக்கும் பொழுது நிகழும் கிரிகைகளில் ஒன்றாகிய மணமகனது பெயர் உத்தியோகம் தந்தை பெயர் பாட்டன் பெயர் முப்பாட்டன் பெயர் முதலியவைகளை ஆசாரியர் கூறி ஆசீர்வாதம் செய்யும் பொழுது "சிங்கைபுர ஜமீன்தாராகிய வீரசிங்க முதலியார்" என்று கூற அவர் எனது பெரிய தந்தையார் என்பது விளங்கவில்லையா? முன்னர் நான் பலமுறையும் இதைப்பற்றி விபரமாகக் கூறியிருக்கின்றேனே என்றனன்; அவள் குற்றமற்ற துக்கமுகத்துடன் அருட்பிரகாசமே! அச்சமயம் நடந்த விவாக சடங்குகளெல்லாம் எனக்குக் கனவுபோலிருந்தன; எல்லாம் மூடமாகத் தோற்றின. ஆம். அது ஒரு கனவுதான். விழித்துக்கொண்டிருக்கும் பொழுது கண்ட கனா. அப்பொழுது கண் விழித்தபடியே நித்திரையாய்விட்டேன். நான் ஒன்றையுங் காணவில்லை ஒன்றையுங் கேட்கவில்லை ஒன்றையும் உணரவில்லை; திருமாங்கல்யதாரணம் செய்ததுகூட எனக்குத் தெரியாது. ஆசாரியர் உன் நாயகனை ஏற்றுக்கொண்டாயா என்று வினவியபோது, ஆம் என்று சொல்லியிருப்பேனாயின் என்னைச் சொல்லும்படி ஈசன் தந்த வல்லமையினாலேயே சொல்லியிருத்தல் வேண்டும். என்னை மணக்கும் நாயகன் என்று சொல்லியிருந்தாலும் அச்சமயம் எனக்கு விளங்கியிருக்கமாட்டாது; ஐம்புலன்களும் அடங்கியிருந்தபடியால் எனக்குப் புலப்படவில்லை. ஓ அருட்பிரகாசமே! நான் இதுவரையும் நடத்திக்கொண்டுவந்த ஜீவியம் எவ்வளவு பயங்கரமாயும் கெடுதியாயுமிருந்ததென்பது உமக்குத் தெரியாது; ஆனால் தற்சமயம் இந்த விபரங்களையெல்லாம் சொல்லவேண்டிய அவசியமில்லையாயினும் சொல்லிவிட்டேன் என்றாள்.

அப்பொழுது அருட்பிரகாசம் மன எழுச்சியுற்றடுமாறினவனாய் சரீரம் நடுநடுங்கப் பூங்காவனமே! நான் உன்னை வருத்துகின்ற பாதகனாய் இருக்கின்றேன்; பயித்தியம் பிடித்தாற்போல உன்னை நேசித்த நான் அவ்வளவு நிர்ப்பந்தமாய் வருத்துகின்றேனே! நான் என் அறிவுள்ளவனாகவிருக்கவில்லை; அப்படியே நான் காண்கின்றனவும் ஆராய்ந்து பார்க்கின்ற ஒவ்வொரு வஸ்துக்களும் அவநம்பிக்கையும் சந்தேகமுமாய்த் தோற்றுகின்றன என்று வெகிட்சியுடன் கூறுகின்றான். பூங்காவனம் பதறுதலான பயங்கரத்துடன் அருட்பிரகாசமே! கடவுளுக்காக இனிமேல் இதைப்

பற்றிப் பேசாதிருக்கவேண்டுகின்றேன் எனலும், அவன் வேறெதைப்பற்றிப் பேசச்சொல்லுகின்றாய்? மனப்பாக்கியத்தைப்பற்றிப் பேசச்சொல்லுகின்றாயா? அதுதான் ஒருகாலுமில்லாமற் போயிற்றே. கீர்த்திக்கும் செல்விக்கைக்குமாக நான் முயற்சிசெய்யும்படி என்ன ஏவுதலிருக்கின்றது? நான் விடாமுயற்சியினாற் பாடுபட்டுச் சம்பாதித்த கீர்த்தி முத்திரைகளைத் தலைமேல் வைத்தல்வேண்டுமென்றெண்ணியிருந்த நீயே வேறொருவருடையவளாயினாய் என்றுகூறி மீட்டும் சடுதியாய் பூங்காவனமே! உன்னுடைய பிதாவுக்கு நான் எழுதிய கடிதங்களைப்பற்றி அறிவேனென்று இப்போதுகூறினாயே, அது என்ன என்றான். அதற்கு அவள் என்னுடைய பிதா காலஞ்சென்றபின் தான் அக்கடிதங்களை அவரது மேசையிற் கண்டேன்; அப்பொழுது தான் நீர் உயிருடன் இருக்கின்றீரென்பதை அறிந்தேன். இதை நம்பும். நான் பட்ட வேதனையை வேறொருபெண்ணும் அனுபவித்திருக்கமாட்டாள். அருட்பிரகாசமே! இன்னும் ஒரு காரியத்திற்கு மாத்திரம் நான் கடவுளைப் பிரார்த்தித்தேன். அது என்னவென்றால் நீர் ஆழமான சமுத்திரத்தில் விழுந்திறவாமல் உயிர்பெற்று விட்டீரென்றதே என்றாள். அப்பொழுது அவன் அந்தோ நான் அப்படி இறந்ததில்லையே என்று துக்கமாகச்சொல்லி உன்னுடைய பிதா நான் எழுதிய இரண்டு கடிதங்களையும், தம்முடைய அநீதியை நீர் அறியும்படி மறைத்துவைத்திருந்தனரோ வெனலும், அவள் அப்படி அல்ல; ஒருவேளை கேள்விப்பட்டிருப்பீர். அவர் சடுதியாயிறந்தார்; அவருக்கு அறிவில்லாமல்வந்துவிட்டது எனலும், அவன் இடியிடித்தாற்போல அவருக்குக் கடவுள் தண்டனை வந்துவிட்டதேயென்றான். அப்பொழுது அவள் அருட்பிரகாசமே! நீர் என்னைத் தப்ப வையும்; நீர் இறந்தவருடைய மகளுக்குத் தான் இப்பொழுது சொல்லுகின்றீரென்பதை நினையுமென்று துக்கத்துடன் சொன்னாள். அவன் பின்னும் கையைக்கட்டி புருவத்தில் வைத்துக்கொண்டு பூங்காவனமே! கடவுள் எனக்கு உதவிசெய்யட்டும்; நான் பைத்தியம் பிடித்தவனைப்போலாய்விட்டேனே! உனது தந்தையார் என் அக்கடிதங்களை அழிக்காமல் வைத்திருந்தார் என்றனன்? அதற்கு அவள் அது விபரிக்கக்கூடாத ஒரு இரகசியமாக விருக்கின்றது; நான் அறியமாட்டேன்; ஒரு சொல்லக்கூடாத எண்ணத்தினால் அதை வைத்திருந்தாரோ; அல்லது பராமுகமாய் விட்டா

ரோ? தெரியவில்லை என்றாள். அப்பொழுது அவன் இல்லைபூங்கா வனமே! அது பாராமுகமல்ல; அது சர்வ வல்லமையுள்ள கடவுளுடைய செயலா யிருக்கின்றது; அது என்னுடைய அழியாத மாற்றக்கூடாத நேசத்தை உன் பிதா இறந்ததன் பின்னும் உனக்கு அத்தாட்சிப் படுத்தவும், நான் என்னுடைய சத்தியத்தை என்றுங் காப்பாற்றினே னென்று உனக்கு அறிவிக்கும்படியுந்தான் என்றான். பூங்காவனம் அருட்பிரகாசமே! நீர் இன்னும் என்னை நீந்தாட்சணை பண்ண நினைக்கின்றீரா என்றுகண் களினின்றும் நீர் சொரிய இது கொடுமை, இது பட்சவீனமாக விருக்கின்றதே எனலும், அவன் பூங்காவனமே! நான் உனக்குத் தவறுசெய்துவிட்டேன்; என்னை மன்னியும்;எனது நடத்தைஇழி வாயும் பட்சமில்லாததாயும் மிருகத்தன்மையாயும் பெண்தன்மை யாயும் இருக்கின்றது. நீர் ஏமாற்றப்பட்டீரென்பது எனக்குத் தெரியவருகின்றது. கடவுள் நம்மிருவர்மீது கிருபை வைப்பாராக என்று இரக்கத்துடன் கூறினார்; அப்பொழுது அவள் கேட்க வேண்டுமென்று எண்ணியிருந்ததாகிய ஒன்றை நினைத்து அருட் பிரகாசமே! என்னசெய்தல்வேண்டும். நீர் எப்படி நடக்கப்போகி ன்றீர் என்றாள். அருட்பிரகாசம் என்னை நீ மன்னிப்பாயென்று நான் உன்னை மன்றாடிக் கேட்கிறேன் ஒருகாலும் ஒப்பேறாத நம்பிக்கை என்மனதில்வந்துவிட்டது; உன்னுடைய நடத்தையின் சுதந்திரத்தை ஒருபோதும் அவதூறுபண்ண மாட்டேன். நான் என்னை ஒரு துன்மார்க்கனும் பாதகனுமாக்கிக் கொண்டே னென்பதைக் கடவுள் மன்னிக்கட்டும் எனலும், அவள் அருட்பிர காசமே! நாம் காத்திராப்பிரகாரமாகச் சந்திக்கவேண்டி யிருந்த சந்திப்புமுடிந்துவிட்டது; நீர் இனிமேல் ஒருபோதும் இங்கு நிற் கக்கூடாது என்றாள். அப்பொழுது அருட்பிரகாசம் நான் சடுதி யாகப்புறப்படக்கூடாது; அப்படிச்செய்தால் சந்தேகத்துக்கு இட முண்டாகும். இன்னுஞ் சில நாளைக்கு இங்கே நிற்க எண்ணுகின் றேன் என்று கூறி வாரும் மாளிகைக்குப் போவோம் எனலும், அவள் உம்மில் வித்தியசமான எண்ணங்கள் வந்துவிட்டதோ வென்று சிறிது பயந்திருந்தே னென்றாள். அருட்பிரகாசம் ஆ! அரைப் பைத்தியகாரனாய் இருந்துவிட்டேன். நீ மனம்வாக்குக் காயமொத்து எனக்குத் துரோகம் செய்துவிட்டாய் என்று நினை த்தபொழுது என் இருதயம் வெடிக்கும்படி தூங்கின்றுவிட்டேன்.

பின்புஎல்லாமறிந்தவுடன் என்னைமன்னிக்கும்படி ஒருசிறுபிள்ளை போல அழலாமென்றும் எண்ணினேன்; நான் என்ன செய்யப் போகின்றேனென்று கேட்கின்றாயல்லவா? பெரிய தந்தையார் எனக்கு மேன்மையான உத்தியோகம் சம்பாதித்துக்கொடுக்கும்வரையும் இங்கே தங்கியிருந்து பின் ஒருபோதும் சந்திக்காதபடி விடைபெற்றுச் செல்லுவேனென்றேன் என்றான்.

இவ்வாறு இவர்களிருவரும் வார்த்தையாடிக்கொண்டு தத்தம் இடங்களுக்குச் சென்றுவிட்டார்கள். பூங்காவனம் தன்னுடைய அறைக்குட் பிரவேசித்து நடந்த சம்பவங்களைப் பற்றி நினைத்து துக்கப்பட்டுக்கொண்டிருந்தாள்.

ஏழாம் அதிகாரம் முற்றிற்று.

மா. சிவராமலிங்கம் பிள்ளை,
யாழ்ப்பாணம்.

## ஸ்நுஷா விஜயம்.

(முற்றொடர்ச்சி)

† புத்திரீ ரமணன் என்னும் அபிமான மானது மிகவும் பெரியது. ஆகா! மாதர்கள் தங்களுடைய துஷ்ட மாப்பிள்ளையைச் சிஷ்டனாக நினைப்பது எதனாலேயோ தெரிய வில்லையே! (பிரகாசமாக) உன் மாப்பிள்ளை சற்குண முடையவனாகவே இருக்கட்டும்; மனைவி கெட்ட குணமுடையவளாகவே இருக்கட்டும். இவ்விஷயத்தில் நான் செய்யவேண்டுவதென்ன? உத்தரவு செய்?

துராசை:—உன்மனைவியை ஒரு குடிசைவீட்டில் வைத்து! அவள் உதரபோஷண நிமித்தம் தினந்தோறும் என்கையாலாவது என் பெண்கையாலாவது தானியம் கொடுக்கவேண்டும்.

ஸாதுகுணன்:—(தனக்குள்) கஷ்டம்! இவளிடத்தேற்பட்ட மாதிரு பக்தியன்றோ என்கோபத்தைத் தடுக்கின்றது. (பிரகாசமாக) அதற்கு மேல் ... ... ... ...

---

† புத்ரீரமணன் - மாப்பிள்ளை.

துராசை:—என்பிராணன் நிலைத்திருக்க நீவிரும்பினால், எவ்விடம் அத்துஷ்டை இருக்கின்றாளோ அவ்விடம் என் உத்தரவின்றி நீயும் செல்வது கூடாது

ஸுகுணன்:—அம்மா ... இப்படிச் செய்வதால் உனக்கென்ன பிரயோஜனம் ?

துராசை:—உன் தங்கை நாயகனுடன் கூடி வந்து இவ்விடமே ஸுகமாக வசிப்பள். அப்படி வந்த என்பெண் விருத்தர்களான தாய் தந்தையருக்குத் தொண்டு செய்து கொண்டு உனக்கும் ஹிதஞ் செய்பவளாவள்.

ஸுகுணன்:—அம்மா ! மருமகள் உன் பெண்களுக்கு அப்பிரியமாக என்ன செய்கிறாள் ?

துராசை:—உன்மனைவியின் கெட்ட வியாபாரத்தை நீ அறியவில்லை. புதிய அலங்காரங்களால் அலங்கரிக்கப்பட்ட என் பெண்ணை இவள் வக்கிரப்பார்வையால் பார்க்கின்றாள். இவள்போக நிமித்தம் செய்யப்பட்ட பட்சணத்தைப் பார்த்து நெடுங் காலம் பெருமூச்சு விடுகின்றாள்.

ஸுகுணன்:—அம்மா ! அப்படியே ஏற்பாடு செய்கிறேன்; அப்படிச் செய்யாவிட்டால் என்ன செய்வாய் ?

துராசை:—உன்னை வயிற்றில் பத்து மாதம் சுமந்து, பெற்று நெடுங்காலம் வளர்த்த நான் விஷத்தைப் புசித்து மரிப்பேன்.

தலையில் அடித்துக் கொள்ளுகிறாள்.

ஸுகுணன்:—அம்மா ! தந்தையின் உத்தரவுப்படி செய்கிறேன்.

துராசை:—மருமகளால் வஞ்சிக்கப்பட்ட கிழவனான அவன் என் பிராணனை விரும்பவில்லை; உன் ஸாந்நித்தியமே வேண்டாம். (பரபரப்புடன் போகிறாள்).

ஸுகுணன்:—(முன்னேபார்த்து) அதோ என் பிரியை வருகின்றாள். அவள்மாமியின் கெட்ட வார்த்தைகளாகிய விஷத்தின் தாபபாரத்தால் பீடிக்கப்பட்ட மனதை, என்னிடங்கொண்ட ஆசை யென்னும் அமிர்தத்தால் நன்றாய்த் தணித்துக் கொண்டு ஆச்வாஸ மடைந்து, ரஹஸ்யத்தில் என்வரவை விரும்பிக் கிலேசம் அடைகின்றாளோ? தெரியவில்லையே.

* ஸச்சரிதை என்னும் மனைவி பிரவேசிக்கிறாள்.

---

* சச்சரிதை - நல்ல சரித்திரமுடையவள்.

ஸச்சரிதை:—(தனக்குள்) மாதாவால் நிர்ப்பந்திக்கப்பட்ட மனத்தையுடைய என் நாயகன் என்நிமித்தம் கஷ்டப்படுகின்றார். மிகக்கஷ்டம்! இவ்விஷயத்தில் ஓரிடம் மாதாவிடம் அன்பும் மற்றோரிடம் என்னிடம் அதிக ஆசையும் இவரைத் தடுக்கின்றன.

ஸுகுணன்:—பிரியே! எதற்காக வந்தாய்?

ஸச்சரிதை:—நாதா! ஏதோ சொல்ல விருப்ப முற்றிருந்தும் நான் தங்களிடம் தற்சமயம் பயப்படுகிறேன்.

ஸுகுணன்:—வாஸ்தவத்தைச் சொல்.

ஸச்சரிதை:—எவ்வளவுகாலம் நாம் குருஜந நிர்ப்பந்தத்திலிருந்து மறைந்தவர்களாயிருப்பது? உமது அன்னையார் இரவில் புசித்துவிட்டுப் படுக்கை விட்டைப் பரப்பரப்புடன் முன்னரே அடைந்து அவ்வறையின் வாசற்படியில் தலையை வைத்துப் படுத்து உறங்குகிறாள். அப்படி யிருக்க, நான் தங்களிடம் எப்படி வருவேன். பின்னும்—வீட்டில் எந்தக் காரியம் அவசியம்செய்யவேண்டுமோ பகலில் அந்தக்காரியம் செய்ய ஆரம்பித்த என்னைத் தானே தடுத்து, இரவு தோறும் நீர் உண்டு படுக்கை அறையை அடைந்திருக்கும் பொழுது இக் காரியத்தைச் சீக்கிரம் செய் என்று ஆக்ஞாபிக்கிறாள்.

ஸுகுணன்:—(தனக்குள்) மாதர்கள் பௌத்திரோற் பத்தியை மட்டும் விரும்புகிறார்கள்; மருமகளுக்கும் பிள்ளைக்கும் ஸம்பந்தத்தை மாத்திரம் ஏன் விரும்புவதில்லை? கஷ்டம்! நல்ல வம்சத்து ஸ்திரீகள் அப்படியிருப்பதில்லை. கெட்டமனமுடைய மாமியானவள் †ஸுரதமின்றி, மருமகளுக்குக் காப்பத்தை விரும்புகிறாள். இவள் ஆகாரஸம்பத்தின்றி க்ருஹத்திற்கு யோக்கியமான சரீர புஷ்டியை விரும்புகிறாள். ஆச்சரியம்! எவளுடைய நோயற்ற வாழ்வானது தன் பிள்ளையின்போக நிமித்தம் பயன்படுகிறதோ அந்த மருமகளை மாதர்கள் விருத்திக்குக்கொண்டுவர விரும்புவதில்லை; எவள் பிறர் போக நிமித்தம் ஆகிறாளோ அந்தப் பெண்ணை விருத்திக்குக் கொண்டுவருகின்றனர். (பிரகாசமாக) மங்களகரீ! என் அன்னையிடம் நீ வீணே குற்றங்களை ஆரோபணம் செய்கிறாய்?

---

† ஸுரதம் - ஸம்போகம்.

ஸச்சரிதை:—ஆரியபுத்திர! நான் தோஷங்களை ஆரோபணம் செய்யவில்லை. மாமி என்னிடம் கொண்டுள்ள வெறுப்புகளையெல்லாம் சொல்லப் பயப்படுகிறேன்?

ஸுகுணன்:—அப்படியானல் சொல்?

ஸச்சரிதை:—மாப்பிள்ளை வரவென்பது மாமிக்குப் பெரும் உத்ஸவமாயிருக்கிறது. நாதா! எனக்கு உமது சேர்க்கையில் பங்கம் செய்யாமலிருந்தால், அதுவே போதும்; அடிக்கடி மாப்பிள்ளையின் வரவு இருப்பதனல் நான் குற்றஞ் சொல்ல வரவில்லை. பின்னும்-மாப்பிள்ளை மாமி வீட்டை அடைந்திருக்கும்பொழுது வெண்பட்டும் கந்தைத் துணிபோலாகிறது; தூண்முதலிய வற்றிற் குபயோகப்படக் கூடியதும் மனோகாரமுமான மரமும் விறகுபோலாகிறது; நெய் ஸமுத்திர ஜலம் போலாகிறது; தயிர் கஞ்சிபோலாகிறது. வீண்பேச்சேன்? சுவர்ணமும் காச்சக்கல்போலாகிறது.

ஸுகுணன்:—அறிவாதவளே! மாப்பிள்ளையிடம் கொண்ட ஆசையென்னும் கெட்ட கிரஹத்தின் ஆவேசத்தால் நீயும் அப்படி ஆவாய்.

ஸச்சரிதை:— உமது அன்னை என்னிடம் காரணமின்றிக் கோபிக்காமலிருந்தால் அதுவே போதும். சகல தனத்தையும், மாப்பிள்ளைக்குப் பூஜையுடன் கொடுக்கட்டும்.

ஸுகுணன்:—மந்த புத்தியுள்ளவளே! நீ என்ன சொல்லுகிறாய்? உன் நிமித்தம் மாதாவை விருதாவாக த்வேஷித்துக் கொள்ளமாட்டேன்.

ஸச்சரிதை:—நாதா! உமக்கு மாதிர் தோஷத்தை நான் விரும்பவில்லை. மாதா மனிதர்களுக்கு முதல் தெய்வமன்றோ? குருஜனம் செய்த ஸஹிக்க முடியாத எல்லாத் துயரத்தையும் ஸகிக்கிறேன். நீர் ஒருபொழுதும் மாதாவின் சாபமாகிற பாசத்தாற் கட்டுப்பட்டவராக வேண்டாம்.

ஸுகுணன்:—(தனக்குள்) ஸச்சரிதை யென்ற பெயர் இவளுக்கே தகும். உலகில் கெட்ட குணமுடைய மாமியால் பீடிக்கப்படும் மனைவி தன் நாயகன் ஸமீபத்தை அடைந்து கோபித்துக் கொண்டு "நீ உன் மாதாவைச் சீக்கிரம் வீட்டை விட்டு வெளிப் படுத்தா விடில் கிணற்றில் விழு

வேன்; விஷத்தைப் புசிப்பேன்" என்று சொல்லுகிறாள். (இவள் அப்படி இல்லை) (பிரகாசமாக) பத்திரே? உனக்கு என்னிடம் ஆசை யிருக்குமாயின், எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

ஸச்சரிதை:—எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளுகிறேன். உமது பிரேமைதான் எனக்கு விருப்பம்.

ஸுகுணன்:—(தூரத்தில் பார்த்து)பிரியே! தந்தை வருகின்றார்; ஆனதால் நீ போ.

ஸச்சரிதை:—சரி போகிறேன். (வெளியிற் சென்று மீண்டும் பிரவேசித்து ஓரிடத்தில் மறைந்து கொண்டிருக்கிறாள்).

(ஸுசிலன் பிரவேசிக்கிறான்)

ஸுசீலன்:—(தனக்குள்) கஷ்டம்! எப்பொழுதும் காரணமின்றி முட்டாளான என் மனைவி மருமகளிடம் த்வேஷங்கொள்ளுகின்றாள். இந்த விசாரம் என்னை இராப் பகலாய் வ்யாகுலப் படுத்துகின்றது.

ஸுகுணன்:—(சமீபத்தை அடைந்து நமஸ்கரித்து) அப்பா! வாடிய முகத்துடன் என்ன சிந்திக்கிறீர்கள்?

ஸுசீலன்:—குழந்தாய்? புத்திரனின் பாதி ஆத்மாவே ஸ்நுஷா சப்த வாச்யத்தைத் தரிக்கின்றது. அறிவுள்ளவர் மருகளிடம் பேத புத்தி கொள்வார்களா?

ஸுகுணன்:—மருமகள் நல்லசுபாவமுடைய வளாயிருந்தால்அவளிடம் புத்திரனைக் காட்டிலும் பேத மின்மை பாராட்ட வேண்டியது தான். அவள் கெட்ட சுபாவமுடையவளா யிருந்தால்—

ஸுகுணன்:—அவள் கெட்ட சுபாவமுடையவளாகவாவது நல்ல சுபாவமுடையவளாகவாவது பாக்கியவசத்தால்இருக்கட்டும். மாமனார் மாமிகள் மருமகளைத் தம்வயிற்றுப் பெண்ணைப் போல் பார்க்க வேண்டுவ தவசியம். ஆச்சரியம்!

வித்தியாஸமாகக் கிரஹிக்கும் இவள் எந்தக் காரணத்தால், மாப்பிள்ளையைப் பிள்ளையைக் காட்டிலும் சிறந்தவனென்று நினைக்கிறாளோ அதனால் சிறப்பற்ற அந்த மாப்பிள்ளைக்கு சிறப்பு உண்டாய் விடுமா? தாய் தந்தையர்கள்

சந்தோஷத்தால் தமது பெண்ணுக்குப் பூட்டும் பூஷணத்தி ற்கு மாப்பிள்ளை உரியவனாகிறான். அவ்விஷயத்தால் தாயும் பிரபுவாகிற தில்லை; சகோதரனும் பிரபுவாகிறதில்லை. நம் முடைய பொருள் முழுதும் கொடுக்கப் பட்டிருக்குமாயின், மனைவி சந்தோஷிக்கிறாள்; தாயார் மிகுதியும் புத்திரனுக்கு வசமா யிருந்தபோதிலும், தன் மருமகளின் பூஷணங்களைக் கண்டு அசூயைப் படுகிறாள். ஆச்சரியம்!

ஸச்சரிதை:-(தனக்குள் இப்படி யதார்த்தத்தை அறிந்த மாம ஞர் எனக்கும் என்பாக்கிய வசத்தால் கிடைத்திருக்கிறார்.

ஸுகுணன்:—அப்பா! ஸ்திரீகள் மாப்பிள்ளையிடம் அதிக ஸ்நேக முடையவர்களா யிருத்தல் வேண்டும்; புத்திரியின் மாங்க லிய ஸூத்திரம் எவன் பிராணனை ஜீவனமாகவுடையதோ?

ஸுசீலன்:—குழந்தாய்? பிள்ளையின் கிருஹஸ்தாசிரமம் மருமக ளின் பிராணனை ஜீவனமாக உடையதல்லவா?

ஸுகுணன்:—அவ்விஷயத்தில் விசேஷ மிருக்கிறது. மருமகள் பிராணனுக்குக் கெடுதி யுண்டாமாயின், ஜீவனமற்றிருந்த போதிலும், கிருஹஸ்தாசிரமம் புத்திரனுக்குமீண்டும் வேறு மருமகள் ஸம்பாதிப்பதினால் ஜீவனை யடையு மன்றோ? மாப் பிள்ளையின் பிராணன் போனால் பெண்ணின் மாங்கல்ய ஸூத்ர மும் போய்விடும்.

ஸுசீலன்:—குழந்தாய்! மனைவியின் பிரிவால் துபரத்தை அடை ந்த புத்திரனுக்கு மறுபடியும் வேறு ஒரு ஸ்திரீயை ஸம்பா தித்தால் முதிர்ந்த வயதை யுடைய தம்பதிகள் சுகத்தை அடைவார்களா? வயதில் தனக்குச் சமானமல்லாத நாய கனை அடைந்த அப்பெண் ஒரு பொழுதும் அவனை நேசிக்க மாட்டாள்.

ஸுகுணன்:—பின்னேவரும் மருமகள் ஸாத்வியாக இருந்தால், வயதால் தனக்குச் சமானமல்லாத நாயகனிடம் அதிகஆசை யில்லாதவளாயிருந்த போதிலும், விருத்தர்களான மாமனார் மாமிகளை ஏன் ஆராதிக்க மாட்டாள்?

ஸுசீலன்:—குழந்தாய்! தன் நாயகனிடம் விருப்ப மற்ற ஸ்திரீ எப்படி அவர்களை ஆராதிப்பள்? உலகில் மாமனார்

மாமிகள் மருமகளுக்கு ஸ்வபாவ சத்துருக்களா யிருக்கிறார்களல்லவா ?

ஸுகுணன்:—வாதம்போலும்; செய்யவேண்டியது எதுவோ அதை ஆஞ்ஞாபனம் செய்யுங்கள்.

ஸுசீலன்:—குடும்பத்தில் கலகமுண்டானால் வம்ச விருத்தியை விரும்பும் கிருஹாதிபதி அவர்களைப் பிரித்து வெவ்வேறாகக் குடித்தனம் செய்யும்படி செய்யவேண்டும். எவள் மனம், வாக்கு, காயம் இவைகளால் நாயகனுக்கு க்ஷேமத்தையே விரும்புகிறாளோ அவள் நல்லோர்களால் ஸாத்வீ யென்று கூறப்படுகிறாள்.

ஸுகுணன்:—தங்களிஷ்டம் போல் செய்கிறது. அப்படியானால், நெடுங்காலம் நாம் வசித்துவந்த அழகான இவ்வீட்டில் அன்னை வஸிக்கட்டும்.

ஸுசீலன்:—பாக்கியின்றிப் போகத்தை அடைந்தவளும் விருத்தையும் கெட்ட புத்தியுடையவளுமான அவள் ஜீரணமான வீட்டில் வாஸஞ்செய்ய யோக்கியமானவளே யொழிய அழகான வீட்டில் வஸிக்க யோக்கியமற்றவள்.

ஸச்சரிதை:—(தனக்குள்) மாமனாருக் கிருக்கும் † ஸுசீலனென்னும்பெயர்தகும். பின்னும் இவர்வார்த்தையை அங்கீகரித்து நாயகன், தாயை வெளியே யனுப்பிவிட்டால் "மனைவிக்கு அடிமையா யிருப்பதால், மாதாவுடன் த்வேஷிக்கிறான்" என்று பெரிய அபவாதம் உண்டாய் விடும்.

ஸுகுணன்:—(முன்னே பார்த்து) அப்பா ? குழந்தை தங்கை விரைவாக வருகின்றாள்.

ஸுசீலன்:—உன்தாயைக் காட்டிலும் கெட்ட குணங்களில் இவள் மேலானவள்.

(துர்லவிதை பிரவேசிக்கிறாள்.)

துர்லலிதை:—(தழதழப்புடன்) அப்பா? சகோதரா! நீங்கள் எதற்காக என் தாயை உபேக்ஷிக்கிறீர்கள். வேறு கதியற்றவளல்லவா அவள்?

ஸுகுணன்:—பத்திரே! ஏன் இப்படிச் சொல்லுகிறாய்?

† ஸுசீலன்-நல்லகுணமுடையவன்.

துர்லலிதை:—மருமகள் செய்யும் கெட்ட வியாபாரத்தை ஸகிக்க முடியாமல் கண்களிலிருந்து எப்பொழுதும்நீர்த்திவலைகளைப் பெருக்கிக்கொண்டு இராப்பகலாய்க் கிலேசத்தை அடைகிறாள். இவள் கொஞ்ச தினத்தில் † காலதர்மத்தை அடையப்போகிறாள். (கண்ணீரை விடுகின்றாள்.)

ஸுசீலன்:—குழந்தாய் ! இதற்குமேல் உன்தாயார் கால தர்மம் அடையத் தகுந்தது தான்.

துர்லலிதை:—அப்பா ! உமக்குக் கைங்கரியம் செய்ய மருமகள் இருக்கிறாள் என்னும் தைரியம் மிகுதியாயிருக்கிறது. எனக்கென்ன கதி ?

ஸுசீலன்:—உனக்கு உன் நாயகன் தாய் (உன்மாமி) முக்கிய கதியாயிருக்கிறாள்.

துர்லலிதை:—அவளோ என்னிடம் கெட்ட குணத்தை ஆரோபணம் செய்து கோள் சொல்லிக் கொண்டு தயையற்ற மனமுடையவளாய், புத்திரனைக்கொண்டு என்னை வெளியே யனுப்பி விட்டாள். அதுவும் என் அன்னையின் மனத்தைப்பீடிக்கிறது.

ஸுசீலன்:—இப்படியேதான் ஸ்நுஷா செய்த நிர்ப்பந்தம் அவள் அன்னையைப் பீடிக்கும் என்பதை ஏன் அறியவில்லை.

துர்லலிதை:—மருமகள் வார்த்தையில் கொண்ட நிச்சயமானது, உன்னை இப்படிச் சொல்லும் படி செய்கிறது. இல்லாவிடில் அவள் வார்த்தை உன்னால் ஆதரிக்கத்தகுந்ததுதான். எவள் சரீரம் முழுதும் பிதாவினால் சுவர்ணத்தாலும், இரத்தினங்களாலும் பூர்த்தி செய்யப் பட்டதோ ? பின்னும் மிகவும் மிருதுவாயும் அதிக விலையுள்ள தாயுமுள்ள வஸ்திரத்தால் ஆசையால் அலங்கரிக்கப் பட்டதோ ?

ஸுசீலன்:—குழந்தாய் ! உன் சரீரம் கல்லால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றதா? அல்லதுமரவுரியால் அலங்கரிக்கப் பட்டிருக்கிறதா? கஷ்டம்! ஸ்திரீகளுக்கு எதிலும் திருப்தியின்மையே உண்டாகிறது. எனக்கு வஸ்திரத்திற்காக இவ்வளவு தனம் கொடுக்க வேண்டும்; பூஷணத்திற்காக இவ்வளவு தனம் கொடுக்கவேண்டும்; பாத்திரத்திற்காக இவ்வளவுதனம் கொடுக்கவேண்டும் என்று பெண் பிதாவின் தனத்தை அபகரிக்

† காலதர்மம் - மரணம்.

கிறாள். தகப்பனால் மேரு பர்வதம் போன்ற ஆபரணங்கள் கொடுக்கப்பட்டாலும் ஸமுத்திரங்களுக் குட்பட்ட பூமி கொடுக்கப் பட்டாலும் திருப்தி யடையாத ஸ்திரீகள் ஒரு பொழுதும் தன் சகோதர தைர்யத்தைச் சிந்திப்பதில்லை. இஃதிருக்கட்டும். வேறொன்றுமிகக் கஷ்டம்! மாப்பிள்ளை பிதாவிடமிருந்து மிகுந்த சீதனம் கொடுக்கப்பட் டிருந்த போதிலும் மனைவியைப் பார்த்து "உனக்கு உன்பிதா என்ன கொடுத்தார்?" என்று சொல்லி நிந்திக்கிறான்.

ஸச்சரிதை:—(தனக்குள்) நாயகன் பிதா அனுபவப்படி சொல்லுகிறார்.

துர்லலிதை:—சகோதர ? பிதா சொல்வதெல்லாம் முற்றும்பொய். நீயொரு பொழுதும் உன் மனைவியை (பிதாகூறியபடி) நிந்திக்கவில்லை.

ஸுகுணன்:—(புன்சிரிப்புடன் மௌனமாயிருக்கிறான்).

ஸுசீலன்:—குழந்தாய்! கெட்டபுத்தி யுள்ள பெண் மாப்பிள்ளைகளுடைய கெட்ட வியாபாரந் தான் சொல்லப்பட்டது. குணமுள்ள பெண்டிர் பிதா மிதமான பொருளைக் கொடுத்த போதிலும் திருப்தி அடைகின்றாள். குணமுள்ள மாப்பிள்ளையோ திருப்தியுள்ள மனமுடையவனாய் மாமனார் மாமிகளை நல்ல வார்த்தைகளால் திருப்தி செய்விக்கிறான்.

ஸுகுணன்:—குழந்தாய் ! இவ்வாறு வாதஞ்செய்தது போதும்! தாய் என்ன சொல்லுகிறாள்?

துர்லலிதை:—இந்தமருமகளுடன் வஸிக்கமாட்டே னென்று சொல்லுகிறாள்.

ஸச்சரிதை:—(தனக்குள்) தெய்வாதீன மாக மாமி என் உள்ளத்தை யொட்டிச் சொல்லுகிறாள்; ஏனெனின்,—குடும்பத்தில் கலகம் உண்டான பொழுது ஓர் அரண்யத்தில் பழுத்த இலைகளால் மூடப்பட்ட குடிசையில் வஸித்து வந்தாலும் வரலாம்; உப்பில்லாத கஞ்சியைக் குடித்தாலும் குடிக்கலாம். உப்பரிகையில் வாஸமும்வேண்டாம்; மிருஷ்டான்ன போஜனமும் வேண்டாம். அதனால் சௌக்கியமில்லை.

ஸுகுணன்:—குழந்தாய்! தங்காய்! என் மனைவியை வெளியே ஒரு கிருஹத்தில் இருக்கும் படி செய்வோம்.

துர்லலிதை:—அது தான் அன்னைக்கு விருப்பம்.

ஸுசீலன்:—(கோபத்துடன்) துராசை எதை விரும்புகின்றாளோ அதைச் செய்ய மாட்டேன். ஆனால்—அவள் போஜன நிமித்தம் மாதந்தோறும் குறைவின்றி என்னால் கொடுக்கப் படுந் தனத்தைக் கிரஹித்துக் கொண்டு வயிற்றை வளர்த் துக் கொண்டு எங்கேயாவது இருக்கட்டும்.

துர்லலிதை:—இனிமேல் ஒரு பொழுதும் நான் இங்கு வருவதை யும் மாதாவுடன் நீங்கள் வஸிப்பதையும் விரும்பவில்லை யென்று நன்றாய்த் தெரிகிறது. எந்தக் காரணத்தால் அவள் உதரபோஷணமாத்திரம் போதுமான தனம் கொடுக்கிறே னென்று கூறினீர்கள்?

ஸுசீலன்:—குழந்தாய்! இப்படிச் சொல்லாதே! நீ அடிக்கடி வந்து சகோதரருடன் வஸித்துக் கொண்டிருந்து நாயகன் வீட்டு வாஸ நிர்ப்பந்தத்தால் ஏற்படும் சிரமத்தைப் பரிகரித்துக் கொள்ளலாம்.

துர்லலிதை:—கஷ்டம். பாபம்! மாதா இல்லாத வீட்டில் யாரோ ஒருத்திபோடும் அன்னத்தை உண்ணும் எனக்கு அப்படிப் பட்ட சிரமத்தின் பரிஹாரம் எப்படி யுண்டாம்?

ஸுசீலன்.—பத்திரே! அப்படி நினைத்தால் அடிக்கடி இங்கே வந்து மாதாவுடன் வேறிடத்தில் வஸித்துக்கொண்டு சுக மாயிரு. அப்பொழுது உனக்காக மிகுந்த பொருள் கொடுக் கிறேன்.

துர்லலிதை:—பாதகி என்னை வேலைக்காரியைப்போல்நினைக்கிறாய்:

ஸுகுணன்:—பத்திரே! எங்கள் இருவருக்கும் காலக்ஷேபம் நட க்க எவ்வளவு தனம்வேண்டுமோ அவ்வளவு தனம் இப்பொ ழுது உன்மாதாவுக்குச் சுகமாகக் கொடுக்கப்படும்.

துர்லிலதை:—(தனக்குள்) இனி எனக்கு க்ஷேமந்தான். பிதாவி னால் இப்பொழுது பிரித்துக் கொடுக்கப்பட்ட தனத்தில் மீதியாவதைக் கொண்டு அன்னை எனக்கு நகைகள் செய்து போடுவாள். (பிரகாசமாக) ஆரிய! உமது வார்த்தையின் ஆதாவினால் தாயை அப்படியே இணங்கச் செய்கிறேன்.

ஸுகுணன்:—குழந்தாய்? குருஜநத்தை நிர்ப்பந்திக்க வேண்டாம்? அவள் இஷ்டப்படி செய்கிறேன்.

துர்லவிதை பரபரப்புடன் வெளியிற் சென்று மாதாவுடன் பிரவேசிக்கிறாள்.

துர்லவிதை:—(தடுத்து) அம்மா? என் வார்த்தையைத் தட்டாதே. இப்படி செய்வது நமக்கு அநுகூலந்தான்.

துராசை:—குழந்தாய்! முதலில் நான் இதை அங்கீகரிக்காதவள் போல் இருக்கிறேன். உன் நிமித்தம் கொஞ்சம் தனத்தை அடைவதற்கு இதுவே ஸமயம்.

ஸுசீலன் முகத்தை வணங்கிக் கொண்டிருக்கிறான்.

ஸுகுணன்:—அம்மா?

துராசை—அடே! அடே! மூர்க்கா! நீ அம்மா என்று கூப்பிட வேண்டாம். மனைவி படுக்கையை யடைந்து உன் காதில் எதை உபதேசித்தாளோ அத்தலையணை மந்திரம் அவனுக்கு இப்பொழுது சித்தித்தது.

ஸுகுணன்:—அம்மா! என்னிடம் கோபிக்கவேண்டாம். எல்லாம் தந்தையின் செய்கை.

ஸச்சரிதை:—(தனக்குள்) தெய்வமே! என் நாயகனை மாதாவின் சாபத்தால் கெட்டவனாக்காதே?

துராசை:—கஷ்டம், கெட்டவளான அவள் அவனையும் வசீகரஞ் செய்து விட்டாள்.

ஸுசீலன்:—கெட்டவளே! அவள் குணங்கள் எல்லாம் ஸகல ஜனத்தையும் வசீகரணம் செய்யச் சக்தி யுள்ளவைகளோ?

துராசை:—கிழத்தனத்தால் புத்தியில்லாத தந்தை உனக்குச் சொல்லுகிறான். அவன் வாக்கியத்தை அங்கீகரித்தால் உன்னைவிடக் கெட்டவன் வேறுண்டா?

ஸுசீலன்:—கெட்டவளே? யௌவநம் போன போதிலும் மறுபடியும் இப்பொழுது அதை அடைந்து நீ புத்தியுடன் விளக்குகிறாய்? எக்காரணத்தால் நற்குணமுள்ள உன் மருமகளையும் த்வேஷிக்கிறாயோ அதனாலே நீ வெளியிற் செல்.

துராசை:—கிழத்தன முள்ளவனே! நீ வெளியிற் செல்; நான் போகமாட்டேன்.

துர்லலிதை:—(தடுத்து) அம்மா! என் நிமித்தம் ஏதாவது கொஞ்சம் தனம் அடைவதற்கு இதுதான் ஸமயம்.

துராசை:—(மகனைநோக்கி) கெட்டவனே! ஸச்சரிதைக்கு அடிமையானவனே? நீ மாதாவை வெளியேயனுப்புவதால் உண்டான அபவாதத்தை அடைவாயாக; வெளியிற் செல்லுகிறேன். உன்மனைவியின் எண்ணத்தைப் பூர்த்திசெய்; இந்த என் பெண் கண்கள்போல் இரக்ஷிக்கப் பட்டாள். இவளை ஆபரணங்களால் அலங்கரித்து நான் பார்க்கவில்லை. நீ இவளுக்கு இரத்தின மயமான ஒட்டியாணமும் இரத்தின மயமான தோள் வளைகளும் செய்யவேண்டும்.

ஸுகுணன்:—அம்மா! உன்வார்த்தையை மீறி நடக்கமாட்டேன்!

ஸுசீலன்:—பாபி! எல்லாத்தனத்தையும் பெண்ணுக்குக் கொடுத்துவிட்டுப் புத்திரனை ஏழைபாகச் செய்ய விரும்புகிறாயா?

துராசை:—கிழவே! பெண் சந்தோஷமாயிருக்க நீ ஏன் ஸகிக்கவில்லை? எந்தப் புருஷர்கள் புதிதான அலங்காரங்களால் அலங்கரிக்கப்பட்ட சரீரமுடையவளும் அடிக்கடி நமஸ்கரிக்கிறவளுமான புத்திரியைப் பார்த்து சந்தோஷிக்கிறார்களோ அவர்களே புண்ணிய புருஷர்களாவார்.

ஸுசீலன்:—அன்னையின் முகமென்னும் துவார மில்லாவிடின், பெண்ணென்னும் பெருச்சாளி, தன்வீட்டிலிருந்தவஸ்துக்களைக் கொஞ்சம்கொஞ்சமாய் ரஹஸ்யத்தில் அபகரிக்குமா?

ஸச்சரிதை:—(தூரத்தில் பார்த்து) (தனக்குள்) என்னிடம் ஸ்நேக காருண்ய முள்ளவளான மாமியின் தோழி தெய்வாதீனமாய் வருகின்றாள்.

(சாருவிருத்தை பிரவேசிக்கிறாள்.)

சாருவிருத்தை:—தோழி! என்ன சிந்திக்கிறாய்?

துராசை:—சிந்திக்கத் தகுந்தது என்ன இருக்கிறது? பால்யம் முதல் கைகோத்துக் கொண்டு இவ்விடத்தில் நெடுங்காலம் விஹார சுகங்களை அடைந்த உன்னை மட்டும் ஸமர்த்தையான என் மருமகள் வசமாக்கவில்லை; உனக்கு என்னிடம் ஆசையின்மையையும் வசமாகச் செய்து விட்டாள். உனக்கு அவளிடம் இப்படிப்பட்ட ஸ்நேகத்திற்கு ஹேது தெரியவில்லை.

சாருவிருத்தை:— இவள் குணத்தைத்தவிர வேறொன்றும் காரணமில்லை.

துராசை.—அடி! எதனால் என்னை நிந்திக்கிறாயோ எதனால் அவளை மிகவும் கொண்டாடுகிறாயோ, அதனால் நீயும் என்னைப் போல மருமகளால் வெளியில் துரத்தப்படுவாயாக.

(விரல்களால் அடிக்கிறாள்)

ஸுசீலன்:—மிகக் கோபமுள்ளவளே! மருமகளால் துரத்தப் பட்டேனென்று சொன்னால், உன்னைத்தடியால் அடிப்பேன். என்குணங்களாலேயே வெளியில் செல்லுகிறேனென்று சொல்.

துராசை;—கிழவனே! மருமகளால் வஞ்சிக்கப்பட்ட நீ என்ன சொல்லுகிறாய்?

ஸுசீலன்:—(தடியை எடுக்கிறான்.)

ஸுகுணன்:—பிதாவைத் தடுக்கிறான்.

துர்லலிதை:—கஷ்டம்! பாபி! † ப்ரஜாவதி யென்று நாமம் பூண்டவளே! உன் நிமித்தம் என் தாய் இக்கஷ்டத்தை அநுபவிக்கிறாள்; திருப்தியடை! திருப்தியடை!

சாருவிருத்தை:—(துராசையைத் தடுக்கிறாள்).

துராசை:—கெட்ட புத்தியுள்ள புத்திர! என் பெண்ணுக்குப் பூஷணம் செய்வதில் என்ன சொல்லுகிறாய்?

ஸுகுணன்:—அதன் நிமித்தம் போதுமான தனம் இப்பொழுதே கொடுக்கிறேன். (என்று தாயின் பாதங்களில் விழுகிறான்).

சாருவிருத்தை:—(மறைந்திருக்கும் ஸச்சரிதையின் முகத்தை ஸ்தம்பத்தின் ஸமீபத்திலிருந்து பார்த்து இங்கேவா என்று ஸம்ஞ்ஞை செய்கிறாள்).

(ஸச்சரிதை ஸமீபத்தில் வருகிறாள்.)

சாருவிருத்தை:—மங்களகரி! மாமியை நமஸ்காரம் செய்.

(ஸச்சரிதை அப்படியே நமஸ்கரிக்கிறாள்)

துராசை:—முகத்தை மூடிக்கொள்ளுகிறாள்.

சாருவிருத்தை:— தோழி! நமஸ்கரிக்கும் இந்தமருமகளை நீதியால் விளங்குகிறவனும் குணத்தால் நிறைந்தவனுமான புத்திரனைச் சீக்கிரம் அடையென்று சொல்.

---

† ப்ரஜாவதி யென்றால் சகோதரன் மனைவி யென்று பொருளாம்.

துராசை:—(தனக்குள்) எப்படி வேண்டுமோ அப்படி ஆகட்டும். பெண்ணின் ஆபரணத்திற்கு இப்பொழுது அதிக தனம் கிடைக்கிறது. (பிரகாசமாக) குழந்தாய் போ. (பெண்ணுடன் கூடி வெளியே செல்கிறாள்.)

ஸுசீலன்:—குழந்தாய்! நிச்சயிக்கப்பட்ட காரியத்தை முடிப்பதின் பொருட்டுப் போவோம். புத்திரனுடன் வெளியே செல்லுகிறான்.)

சாருவிருத்தை:—மங்களகரீ! மறுபடியும் உனக்கு என்ன பிரியத்தைச் செய்வேன்.

ஸச்சரிதை:—தெய்வாதீனமாக மாமி சபதம் செய்யாமல் பெண்ணுடன் உன் உபாயத்தின்மேல சென்றாள். ஏ மகாபாக்கியமுள்ளவளே! நான் விரும்பியவைகளை யெல்லாம் அடைந்தேன். அப்படி யிருந்தாலும் இஃதிருக்கட்டும்.

பரதவாக்கியம்.

இவ்வுலகில் மனிதர்களுக்கு நாராயணனது தாமரை மலரடியில், பக்திமாத்திரம் உண்டாகட்டும். எல்லாத் துன்பங்களையும் அகற்றக் கூடிய அதுவே எப்பொழுதும் மங்களங்களைச் செய்யட்டும். பின்னும் இந்தக் கோளதேச அரசனுக்கு நாசமற்ற பிராமண பக்தியும், ஸர்வ லோகேசுவரனிடம் மாசற்ற பக்தியும் உண்டாகட்டும். எல்லோரும் போகிறார்கள்.

முதலங்கம் முற்றிற்று.

(நாடகமுற்றிற்று.)

சுபம்.

M. M. நாராயணசாமி ஐயர், முடிகொண்டான்.

---

# வர்த்தமானம்.

ஆஸ்டிரியா இளவரசரும் இளவரசியும் சுடப்பட்டிறந்தனர்.

லண்டன். ஜுன். 28.—ஆஸ்டிரியா இளவரசராகிய ப்ரான்ஸிஸ் பெர்டினண்டும் அவர் மனைவியாரும் ஒரு வண்டியிற் போய்க்கொண்டிருந்தபொழுது ஒரு மாணாக்கன் அவர்களைச்சுட்டுக் கொன்றுவிட்டான். அவர்களைக் கொல்வதற்காக முதலில் ஒருவன் ஒரு வெடிகுண்டை எறிந்தான். அஃது அவர்கள்மீது படவில்லை. ஆனால், அவ்வண்டியிலிருந்தவர்களுள் இருவரும், கூட்டத்தில் நின்றுகொண்டிருந்தவர்களுள் அறுவரும் காயமடைந்தனர். பின் இரண்டாவதுமுறை ஒருவன் துப்பாக்கியால் சுட்டான். அஃது

இளவரசரையும் இளவரசியையும் மிருதியாகக் காயப் படுத்தியது. சிறது நேரத்திற்கெல்லாம் அவர்கள் மரண மடைந்தனர். ஆஸ்டிரியாவுக்கும் ஸெர்வியாவுக்குமுள்ள விரோதத்தினல் இந்தச் சம்பவம் நேர்ந்ததென்று தெரிகின்றது. இந்தக்கொலையானது ஐரோப்பாக் கண்டம் முழுமையும் கலக்கத்தை யுண்டுபண்ணி யிருக்கிறது.

## ஐரோப்பாவில் யுத்தக்குறி.

### ஆஸ்டிரியா – சேர்வியா விரோதம்.

ஜூன் மாதத்தில் ஆஸ்டிரியா இளவரசான ப்ரான்ஸிஸ் பெர்டிநாந்து என்பவரையும், அவர் மனைவியாரையும் ஒரு ராஜத்துரோகி கொலை செய்ததன் சம்பந்தமாகஆஸ்டிரியாவுக்கும், செர்வியாவுக்கும் யுத்தம் நேரிடுமென்றும் அதுகாரணமாகஐரோப்பியநாடுகளி லெங்கும் பெரும்போருண்டாகுமென்றும் தோன்றுகின்றன.

ஜூன்மாதத்தில் நடந்த மேற்படி ராஜாங்கக்கொலையானது ஆஸ்ட்ரியாவுக்கும் ஸெர்வியாவுக்கு முள்ள விரோதத்தால் நடந்ததென்று தெரிகின்றது. அதுபற்றி ஆஸ்ட்ரியாக் கவர்ன்மெண்டார், மேற்படி கொலையிற் சம்பந்தப்பட்ட சிலரைத் தண்டிக்க வேண்டுமென்றும், சில பெரிய உத்தியோகஸ்தர்களை நீக்கிவிட வேண்டுமென்றும், ஸெர்வியாவிலுள்ள பள்ளிக்கூடங்களில் சிறுவர்களுக்கு ஆஸ்ட்ரியாவிற்கு விரோதமாகக் கற்பிப்பதை நிறுத்துமாறு உத்தரவு செய்யவேண்டுமென்றும், மேற்படி கொலையைக் குறித்து அநுதாபக் குறிப்பொன்று வெளியிட வேண்டுமென்றும், இன்னும் பலவாறக ஸெர்வியாக் கவர்ண்மெண்டாரைக் கேட்டிருந்தார்கள். ஆனல் ஸெர்வியாக் கவர்ன்மெண்டார் அதற்குத் திருப்திகரமான மறுமொழி கொடுக்கவில்லை. அதுபற்றி யுத்தம் நேரிடுமென்று தோன்றுகின்றது. ஆஸ்ட்ரியாக் கவர்ன்மெண்டார் ஸெர்வியா இலாக்காவிலிருந்த தங்கள் மந்திரிகளை உடனே ஆஸ்ட்ரியாவுக்கு வந்துவிடும்படி கட்டளையிட் டிருக்கின்றனர். ஸெர்வியாவின் அரசர் தமது ராஜதானியான பெல்க்ரேட்டை விட்டுவிட்டு க்ராகு ஜெவாக்ஸ் என்னுமிடத்திற்கு குடும்பத்துடன் போய்விட்டனர். ஆஸ்ட்ரியாவிலெங்கும் யுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் விரைவாக நடந்து வருகின்றன. அங்கு மார்ஷியல்சட்டம் ஏற்படுத்தி

விட்டனர். வியன்னவி லுள்ள பார்லிமெண்டு சபைகளும் மூடப்பட்டுவிட்டன. அங்கங்கேயிருக்க அந்நியதேச மந்திரிகள் அவரவர்கள் சொந்த தேசங்களுக்குப் போய்க்கொண்டிருக்கின்றனர். சைனியங்களெல்லாம் ஒன்று சேர்ந்து வருகின்றன. ருஷியாவும் ஜெர்மனியும் அவ்வாறே தங்கள் சைனியங்களை ஒன்று சேர்த்துக் கொண்டிருக்கின்றன. ஜெர்மனியின் தலைநகரானபெர்லினில்சுமார் 2000 ஜனங்கள் ஒன்று கூடி அங்குள்ள ஆஸ்திரியப் பிரதிநிதியிடம் சென்று சந்தோஷமாக ஆர்ப்பரித்தனர். ஆஸ்ட்ரியாவின் தலைநகரான வியன்னவிலும்இவ்வாறேஜனங்கள் யுத்தப்பிரியராகச் சந்தோஷம் பாராட்டிக்கொண் டிருக்கின்றனர். ஸெர்வியாவுக்கு விரோதமாக ஆஸ்திரியா யுத்தஞ்செய்யும்பொழுது, ருஷியா செர்வியாவுக்கும், ஜெர்மனி ஆஸ்திரியாவுக்கும் உதவி செய்யுமென்று தெரிகின்றது. அல்பேனியாவில் ராஜ்பக் குழப்பமும், ருஷியாவில் தொழிலாளிகளின் குழப்பமும், இங்கிலாந்தில் அல்ஸ்டர் குழப்பமும் முடிவடையா திருக்கும்பொழுது இந்தப் புதிய குழப்பமும் வந்து ஐரோப்பாவுக்குப் பெருங் கேட்டை விளைவிக்கும்.

மேற்படி கொலை ஸெர்வியாக் கவர்ன்மெண்டிலுள்ள சிலரின் சதியோசனையால் நடந்தமையால் ஆஸ்ட்ரியாவிற்கும் செர்வியாவிற்கும் 28-7-1914 முதல் யுத்தம் நடந்து வருகின்றது.


இனம்! இனம்!! இனம்!!

**இந்தியாவின் மகிமை.**

அநேக சாஸ்திரங்களையும் இதிகாச புராணாதிகளையும் ஆராய்ச்சிசெய்து பரோபகாரமாய் அச்சிட்டு இனமாய்க் கொடுக்கப்படுகிறது. இந்தியா தேசத்தின் பெருமைகளை நிரூபணத்தோடு வெளியிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் வாசிக்கவேண்டிய புத்தகம். விலாசத்தைத் தெரிவிப்போருக்கு இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும். இன்றைக்கே உங்கள் விலாசத்தை யெழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி,
**மணிசங்கர் கோவிந்தஜி,**
ஆதங்க நிக்ரக ஔஷதாலயம்,
22, பிராட்வே & 96, மவுண்ட்ரோட், மதராஸ்.

ஏஜெண்டு:—
*M. A.* நெல்லையப்ப முதலியார்,
38, சின்னக் கடைத்தெருவு, திருச்சினாப்பள்ளி.

## பாரதன்.

இது மதுர மொழிகளால் சுலப நடையில் யாவரும் எளிதிலுணருமாறு எழுதப்பட்டிருக்கிறது. இந்நூலில் உலக நடைக்குரிய தருமங்களும் ஆன்ம லாபத்துக்கடுத்த சாதனங்களும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இது படிப்பவர் மனத்திற்கு உருக்கமும் இன்னொரு முறை படிக்க வேண்டுமென்கிற உற்சாகமும் தரத்தக்கது. சிறுவர் சிறுமியர் இந்நூலை படித்த லவசியம் என்பது ஒரு முறை படிக்கின் விளங்கும். 0 4 0

### வள்ளிபரிணயம்.

இது நவரஸங்களு மமையப் பெற்ற நாடகம். உலகப்பிரஸித்திபெற்ற நாடகபாத்திரராகிய கல்யாணராமய்யர் அவர்கள் எழுதியது. ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் வள்ளிநாச்சியாரைச் சிறையெடுத்த விசித்திர லீலா விநோதம். 0 8 0

### தமிழ் நாவல்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பாரதன் | 0 | 4 | பத்மாசனி | 0 | 10 | மாளவிகாக்னிமித்ரம் | 0 | 8 |
| சுந்தரவல்லி | 0 | 8 | ஜெயசீலன் | 1 | 0 | மதனகாந்தி | 1 | 0 |
| கற்பின் வெற்றி | 0 | 8 | விஜயசுந்தரம் | 2 | 0 | புருஷோத்தமன் | 0 | 10 |
| கிரிமினல்கேஸ் | 1 | 8 | ஏர்க்கேசநந்தினி | 1 | 0 | மாலிகா பூஷணி | 0 | 10 |
| மீனாட்சி | 1 | 0 | குலசேகரன் | 0 | 8 | கன்னிமுத்தம் | 1 | 8 |
| சீதாராம் | 1 | 0 | போஜசரித்திரம் | 2 | 8 | திரிலோகமோகனாங்கி | 1 | 0 |
| மோகமுத்கரம் | 0 | 8 | சாவித்ரிநாடகம் | 0 | 8 | திக்கற்றஇருகுழந்தைகள் | 0 | 12 |
| மங்களாம்பாள் | 0 | 8 | ஸ்ரீமதி | 0 | 1½ | | | |
| ஜயலெக்ஷ்மி | 0 | 8 | வனஜாக்ஷி | 0 | 8 | | | |
| விஜயலெக்ஷ்மி | 0 | 10 | புத்திமானே பலவான் | 0 | 6 | | | |
| ஜடாவல்லவர் | 1 | 8 | | | | | | |

### ஸ்நேகலதா 0—5—0.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சங்கரவிஜயம் | 1 | 0 | தாயுமானஸ்வாமி பாடல் | | |
| ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம் | 1 | 4 | விவேகாநந்தவிஜயம் | 1 | |
| விவேகாநந்தர் ஞானத்திரட்டு 2 பாகமும் | 1 | 0 | மெய்ஞ்ஞானபோதம் | 0 | |
| | | | விநோதரஸமஞ்சரி | 1 | |
| | | | ஆனந்த ராமாயணம் | 5 | 0 |

யோகினி ஜாலக்கதை Fairy Tales No. 1. 0 4 0

சூதசங்கிதா சாராம்ருத வசனம். விலை ரூபா 1 0 0

இப்புத்தகம் இதுவரையில் வசனத்தில் வெளிவந்ததே கிடையாது. இதன்மகிமை யளவுகடந்தது. வேதார்த்தத்தை நன்கு புலப்படுத்தக்கூடியது. மகா புராணங்களுள் ஒன்றாகிய ஸ்காந்தபுராணத்தின் சங்கிதையாறனுள் ஒன்று.

விலாசம்: ஸ்ரீபாலசுப்பிரமணியன் கம்பெனி,
32. ஹைரோட், திருவல்லிக்கேணி, சென்னை.